UYIRMEY SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

சாத்தியம் சொல்லல்ல செயல்

# உயிர்மெய்

வாராந்த இயங்கியல் பேரிதழ்

அறிமுக இதழ் - 01

உயிர்மெய் - 01 | 2016 ஜனவரி 15 | பக்கங்கள் - 16 + புலமை - 08 | E.mail :-uyirmey27@gmail.com | விலை :- 30/=



பனைமரக் காடே பசும் நிழல் தீவே
அறிவெழில் ஒளிர்ப்பில் மன மகிழ்வெய்தி
அகம் விளைப்போமே

இலவச இணைப்பு
புலமை தரம், 3, 4, 5
மாணவர்களுக்கான
புலமைப்பரிசில்
வழிகாட்டி

போர் ஓய்ந்து விட்ட போதும்
அரசியல் தலைமைகளுக்கிடையிலான
வார்த்தைப்போர்கள் ஓய்ந்தபாடில்லை
எலியாய் பூனையாய் புலியாய் சிங்கமாய்
உறுமுகிறார்கள்.
தல தளபதி யுத்தம் ரசிகப்பெருமக்களின்
மனவுணர்வுகளைக் கிளர்த்தி
வாழ்நிலைகளைக் கெடுத்தாலும்
தல தளபதி காட்டில் தெறி வெற்றிதான்
ரசிகப்பெருமக்கள்தான் அணிபிரிந்து
ரணகளப்பட்டு
தொலைந்து போகிறார்கள்


உள்ள 2016 வர்ணக் கலண்டர்



## விநாயகர்

விநாயகருடைய திருமேனி வடிம் அற்புதமானது விநாயகரின் தலை யானைத்தலை. அதில் கொம்புள்ள பாகம் ஆண்பகுதி, கொம்பில்லாதது பெண் பகுதி. காழுத்திற்குக் கீழே இடுப்புவரை தேவ உடம்பு, இடைக்குக்கீழே பூத உடம்பு. இவ்வாறு பூதம் தேவர் ஆண், பெண் அஃறிணை உயர்திணை என எல்லாமாகவும் இருப்பவர் விநாயகர். எந்த தெய்வத்தின் வடிவமாக இருந்தாலும் சிற்ப சாஸ்திர முறைப்படி அமையாததை வழிபட்டால் நன்மை கிடைக்காது என்பார்கள். ஆனால் விநாயகர் வடிவம் அப்படிப்பட்டதல்ல. மஞ்சள், சாணம், களிமண், சந்தனம், என எதில் வேண்டுமானலும் உருட்டி வைத்து பூஜை செய்யும்போது விநாயகரின் பூரண அருள் கிடைக்கும்.

ஆன்மிகத்திலோ அல்லது யோக சாதனையிலோ நாம் படிப்படியாக முன்னேறும்போது நமது உடம்பு முழுவதும் ஒரு விதமான சூடு பரவும். அந்த சூட்டைத் தணிப்பதற்கு அறுக்கம்புல்லே தலைசிறந்த மருந்து. அறுகம்புல்லை அப்படியே மென்று தின்னலாம். சறாகவும் குடிக்கலாம். அது பலவிதமான நோய்களை வரமால் தடுக்கும், தீமை பயக்கும் பக்க விளைவுகளும் உண்டாகது என இக்கால மருத்துவம் கூறுகின்றது. வெண் குஸ்ரத்திற்கு தலைசிறந்த மருந்து அறுகம்புல். விநாயகர் சந்நிதியில் தலையில் குட்டிக்கொள்ளும் வழக்கம் இருந்து வருகின்றது. இதன்மூலம் தலையிலுள்ள சில முக்கியமான நரம்புகள் பலப்பட்டு நினைவாற்றல் அதிகரிப்பதாக விஞ்ஞானத்தின்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. கணபதி, பிள்ளையார், வக்ரதுண்டர், தும்பிக்கையான், ஆனைமுகன், ஐந்துகரத்தான் என பல்வேறு திருநாமங்கள் இவருக்குண்டு. விநாயகரை தொழுதால் வெற்றி வரமாகும்.





# உலக வழிபாடு

உலகில் சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மதங்கள் இருப்பதாக ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் தொகுத்து வெளியிட்ட 'World Christian Encyclopedia' கூறுகிறது. இவற்றுள் 150 மதங்களை பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பின்பற்றுகிறார்கள். எல்லா மதங்களும் பல விஷயங்களில் முரண்பட்டாலும், எல்லோருக்கும் பொது வான விஷயம 'வழிபாடு'. பெரும்பாலான மதங்களின் நம்பிக்கைகளின் உள்ளே நுழைந்து பார்த்தால் எல்லா வற்றிலும் பொதுவான ஒரு விஷயம் புலப்படுகிறது.கடவுளின் சக்தி குறித்து ஒரே மாதிரியான சிந்தனை இருக்கிறது. கடவுளின் உருவம், பெயர், இருப்பிடம் இப்படிப் பல விஷயங்கள் வேறுபட்டாலும், 'இந்த பிரபஞ்சத்தைப் படைத்து, அதில், சகல ஜீவராசிகளையும் படைத்து, மனித இனத்தையும் படைத்து, அவர்களுக்கான வாழ்க்கை விதிகளை நிர்ணயித்து கடவுள்' என்ற விஷயத்தில் எல்லோரும் ஒத்துப் போகிறார்கள். அதேபோல, மறுபிறவி பற்றிய கவலை எல்லோருக்கும் பொதுவாக உள்ளது. 'ஏற்கனவே பல ஜென்மங்களை எடுத்து, கர்மாக்களின் பயனாக மனித ஜென்மத்தை எடுத்த நாம் இறப்புக்குப் பிறகு என்ன ஆவோம், எங்கு போவோம்? கடவுளின் சொர்க்கத்துக்கா? சாத்தானின் நகரத்துக்கா?' என்ற பயம் நாடுகளின் எல்லைகளைத் தாண்டி எங்கும் வியாபித்து இருக்கிறது. சக்தி படைத்த கடவுளை அண்டி, தங்கள் பயத்தைப் போக்கிக்கொள்ளவே 'வழிபாடு'! எப்படி இருக்க வேண்டும் வழிபாடு? மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்வது, முன்நெற்றி தரையில்பட தொழுவது, சாஷ்டாங்க மாகத் தரையில் விழுந்து வணங்குவது என எல்லாமே இறைவன் முன்னிலையில் நாம் தலை வணங்க வேண்டும் என்பதை உணர்த்தும் அடையாளங்களாவன. "ஆனால், வெறுமனே உடல் மட்டும் வணங்கினால் போதாது. நிறையப் பேர் சம்பிரதாயமாக வழிபடுகிறார்கள். அவர்களது மூளை மட்டும் தான் இங்கே இருக்கிறது. அதிலிருந்து 18 அங்குலம் கீழே இருக்கும் இதயம் இறைவனால் நிரம்பி இருக்கவில்லை. அந்த 18 அங்குல இடைவெளிதான் நிறைய பேரின் வழிபாடுகளை இறை வன் நிராகரிக்கக் காரணமாக அமைகிறது" என்கிறார். இறையியல் அறிஞர் ராபர்ட் வெக்னர். உலகில் நாகரிகம் தோன்றிய காலத்தில் ஆரம்பித்த முதல் வழிபாட்டி லிருந்து இப்போது பல்வேறு நாடுகளில் இருக்கும் வழிபாட்டு முறைகள் வரை பார்த்தால், எல்லாவற்றிலும் இந்துச் சமயத்தின் தாக்கம் உண்டு என்பதுதான் ஆச்சரியமான விஷயம்.

நைல்நதியை ஒட்டித் தோன்றிய எகிப்து பேரரசு தான் உலகின் முதல் நாகரிக வாழ்க்கை முறைகளில் ஒன்று. பண்டைக்கால எகிப்து மக்கள் 1500 விதமான கடவுள்களை வழிபட்டதாகப் பட்டியல் தருகிறார்கள் வரலாற்று அறிஞர்கள். மனிதன் கண்டு ஆச்சரியப்பட்ட, பயந்த, அவன் வாழ்க்கைக்கு உதவிய எல்லாமே கடவுளாக மாறி இருக்கிறது. சூரியனுக்கு 'ரே' என்று பெயரிட்டு வழிபட்டார்கள். அவர்களது பேரரசர் சூரிய குலத்தின் வழித்தோன்றல் என நம்பினார்கள். (இங்கே சோழ, பாண்டிய மன்னர்கள் சூரிய வம்சம், சந்திர வம்சம் எனத் தங்களை வர்ணித்துக் கொண்டார்கள்!) பேரரசர் இறந்த பிறகும் அவர்களை ஆள்வர். குழந்தை பிறக்க வேண்டுமா அதற்கு 'பெஸ்' என்ற தேவதை, நோய் குணமாக வேண்டுமா.... அதற்கு 'ஹதோர்' என்ற தேவதை இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சிறப்புக் கடவுள். எல்லோருக்கும் பிரமாண்டமான கோயில்கள். மன்னரும், பூசாரியும் மட்டும் கோயிலில் போய் படைக்கமுடியும். தினசரி சாமி களுக்கு அபிஷேகம், அலங்காரம் எல்லாம் உண்டு. சாதாரண மக்கள் வெளியே நின்று தான் பார்க்க வேண்டும். திருவிழாக் காலங்களில் ஒரு சாமி, இன்னொரு சாமியின் கோயிலுக்கு உற்சவமாக புறப்பட்டுப் போவார். ஒரு அறையை சாமிக்கு ஒதுக்கி, ஏதாவது சிறு தெய்வங்களை வழிபட ஆரம்பித்தனர். ஒவ்வொரு குடும்பத்துக்கும் அதுவே குலதெய்வமானது. எகிப்துடன் வியாபார உறவு வைத்துக் கொள்ள வந்த ரோம் பேரரசு வணிகர்கள் இந்த வழிபாட்டைப் பார்த்துவிட்டு, தங்கள் நாட்டுக்கும் இந்த வழிபாட்டு முறையைக் கடத்திக் கொண்டு போனார்கள். நாம் பூமாதேவி என்கிறோமே.... ரோம் பேரரசில் பூமியைக் காக்கும் தேவதை 'ஜூனோ', வி-வசாயத் துக்கான தேவதை 'செரஸ்', உடல் நலத்துக்கு 'கார்னா'"பக்தன் எந்த எந்த நம்பிக்கையுடன் என்னென்ன வடிவங்களை அர்ச்சிக்க விரும்புகிறானோ, அவரவரது அசை யாத நம்பிக்கைக்கு தக்க வடிவத்தை நான் மேற்கொள்கிறேன்' என்கிறார் கிருஷ்ண பரமாத்மா, பகவத்கீதை யில்! சங்க காலத்தில் சேயோன், மாயோன், வேந்தன், வருணன், கொற்றவை என தெய்வங்களை வழிபட்ட தமிழர்கள் பல மரங்களையும் தெய்வீகத் தன்மை கொண்டதாக வணங்கினர். போர் புரிந்து நாட்டைக் காத்த வீரர்களுக்கு நடுகல் நிறுவிவழிபட்டனர். கள்ளி நிழற்கடவுள், பேய், கூளி என சிறு தெய்வ வழி-பாடும் உண்டு. பின் மெல்ல மெல்ல சைவ, வைணவப் பிரிவுகள் வந்து விட்டன. சைவர்கள் கோயில் என்றால் அது சிதம்பரம் நடராஜர் கோயிலைக் குறிக்கும். வைண வர்கள் கோயில் என்றால், அது ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலைக் குறிக்கும் என்று ஆகிவிட்டது. பலவிதமான சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை இழந்தவர்களால் தான் புதிய மார்க்கங்களுக்கான தேடலைத் துவங்க முடிகிறது. புத்தர் அப்படித் தான் செய்தார். அவருக்கு மறு பிறப்பில் நம்பிக்கை இல்லை. ஆசைகளை ஒதுக்கும் பற்றற்ற நிலையை அவர் போதித்தார். அதற்காக எல்லோரையும் வயிற்றைக் காயப்போட்டுத் தவமிருக்கவும் அவர் சொல்லவில்லை. சரியான வாழ்க்கையின் மூலம் உயர்நிலையை அடையும் வழியை அவர் போதித்தார். அவர் இதை ஒரு மதமாக ஆரம்பிக்கவில்லை. அவர் கடவுளைப் பற்றியும் சொல்ல வில்லை. வழிபாடு செய்யுங்கள் என்றும் சொல்ல வில்லை. ஆனாலும், பெரிய பெரிய ஸ்தூபிக்கள், பகோடாக்கள் கட்டி புத்தரை வழிபட ஆரம்பித்து விட்டார்கள். பௌத்தம் பல பிரிவுகளைக் கண்டு விட்டது. கிழக்காசிய நாடுகளில் பரவியிருக்கும் மஹாயன பிரிவில், மக்கள் கோயில்களில் சென்று வழிபடுகிறார் கள். வெறும் கால்களோடு கோயில்களுக்குச் சென்று, தரையில் அமர்ந்து புத்தரின் போதனை களை மனதுக்குள் உச்சரித்தபடி பிரார்த்தனை செய்கிறார்கள். தலைக்கு மேலே இரு கைகளையும் உயர்த்தி புத்தரை நோக்கிக் கும்பிட்டு மூன்று தடவை நெடுஞ்சாண் கிடையாகத் தரையில் விழுந்து வணங்குகிறார்கள்.



பலர் வீட்டிலேயே ஓர் அறையை பூஜை அறையாக்கி, அங்கு புத்தர் சிலையை நிறுவி வழிபடுகிறார்கள். மெழுகுவர்த்தி வெளிச்சம் தர ஊதுவத்தி மணம் பரப்பு கிறது. வாழ்க்கையில் ஒரு தடவையாவது திருப்பதி, பழனி, காசி, கைலாஸ் யாத்திரை, அமர்நாத் குகைக் கோயில் செல்லவேண்டும் என இந்துக்கள் மனதில் விதம்விதமான ஆசைகள் உண்டு. பௌத்த மதத்தில் பலர் இப்படி யாத்திரை போக ஆசைப்படுவது புத்தர் ஞானம் பெற்ற புத்தகயாவில் உள்ள கோயிலுக்கு! இலங்கையில் இருப்பவர்களுக்கு கண்டியில் இருக்கும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# உயிர்மெய் உள்ளீடு



**முகப்பு**

முகப்புப் படங்கள் அஜித், விஜய்களை முன்னிலைப் படுத்தினாலும் பின்னணியில் கம்பீரமாக எழுந்து நிற்கும் யாழ். நூலகமும் எழுத்து வார்ப்புக்களும் அறிவின் தீர்க்கத்தை வலியுறுத்துகின்றன. ஆழ்ந்து பாருங்கள், வரிகளில் உட்கிடை அஜித், விஜய்களையும் தாண்டி நமது அரசியல் நிலைமைகளை பட்டாவர்த்தனப்படுத்தும்.

**உலக வழிபாடு**

**- ஆராதனா**

உலக வழிபாடு தொடர்பான ஒரு குறும்பார்வை. ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்லாது ஆன்மிகம் தொடர்பான தேடல் உள்ள அனைவரும் படித்து பயன் பட வேண்டிய அரிய கருத்துக்களின் ஊற்று.

**நேற்று அடிமைகள் இன்று அரசர்கள்**

**- லோகேஸ் முருகன்**

தமிழர்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய மானிட வரலாறு. இதை வாசிக்கின்றபோது பாலாவின் பரதேசி ஞாபகங்கள் ஏற்படும். 'இந்த கருத்தூற்றுக்கள் தான் இயக்குநர் பாலாவின் பரதேசி பட உருவாக்கத்திற்கு முன்னீடாய் அமைந்திருக்கும் என்பது எங்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை.

**-வா வா மனிதனே! வரவேற்கும் செவ்வாய்**

**- ஸ்ரீநிவாஸ்**

செவ்வாய்க் கிரகம் தொடர்பான அரிய தகவல்களை மிக மிக எளிமையாக சுவையாக எடுத்துரைக்கும் அறிவியல் கருத்தூற்று. மாணவர்கள் மட்டுமல்லாது ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய அவசிய தகவல்களின் தொகுப்பு.

**நெஞ்சில் நிறைந்த நெல்லியடி லக்ஷ்மி திரையரங்கு**

**- யாழ். வதிரி வாசன்**

ரஞ்சனா, யோகநாயகி, ராஜலக்ஷ்மி, சென்றல், மகாத்மா, லக்ஷ்மி என நீண்டு அருகி மறைந்துவிட்ட வடமராட்சி திரைப்பட மாளிகைகளில் ஒன்றாகிய நெல்லியடி லக்ஷ்மி திரையரங்கம் தொடர்பான நினைவு மீட்டல். யாழ். வதிரி வாசனின் காந்த வரிகள் நிச்சயமாக உங்கள் நினைவு-களையும் மீட்கும்.

**க.பொ.த. உயர்தரம்**

**பல்கலைக்கழக பிரவேசம் தொடர்பான பாட சேர்மானங்கள்**

**- செல்வி வி. அட்ஷயா**

உயர்தரத்திலே துறைப் பிரிவுகளில் மாணவர்கள் பாடங்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கான சுற்று நிருபம் தழுவிய வழிகாட்டித் தொடர்.

**பின் கூனியத்துவம்**

**- ஆதி காப்பியன்**

பின் நவீனத்துவக் கருத்துக்கள் தொடர்பான எதிர்வினைக் குறிப்புக்கள். பின் நவீனத்துவம் தொடர்பான பிற்போக்குக் கருத்துக்களுக்கு முடிவுகட்டும் புத்தாக்கம்.

**மாற்றம்**

**- தென்பொலிகை குமாரதீபன்**

விறுவிறுப்பாக மர்ம நாவல்கள் போல் விரிக்கப்பட்டு எந்தவொரு ஆங்கிலச் சொல்லும் கலக்கப்படாது மொழிச் சிறப்பையும் நாட்டுப் பற்றையும் விதைக்கிறது. புதிய உத்தியில் வித்தியாசமான வார்ப்புகளால் புதிய தமிழ்ச் சொற்களோடு உங்கள் உள்ளம் கவரும்.

**ஆர்முடுகல்**

-

சமகாலப் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி ஆய்வு செய்யும் அலசல் தொடர். சுன்னாகம் நிலத்தடி நீர்ப் பிரச்சினைகளை ஆராய்ந்து உடனடி தற்காலிக தீர்வொன்றையும் தர முயன்றுள்ளது.

**இவைகளோடு இன்னும் பல சுவையான ஆக்கங்கள் இம் மலரை அலங்கரிக்கின்றன.**

---


அகியோபி



## வலி

ஈரம்
இன்னும் காயவில்லை
ஊருக்குள்ளே எத்தனை கொண்டாட்டங்கள்
பச்சை
இரத்தம் பாய்ச்சி
பாடுபட்டுப்பயிர் வளர்த்ததெல்லாம்
கேடு
கெட்ட பிச்சை வாழ்வை ஏற்றக்கொள்ளவா?
வாழ்வு என்ன கேலிக்கூத்தா?
பொச்சடிக்கும்
மதலை முகம் பார்த்து
தலையிலடித்து தாய் அழுததும்
நெடும் பசி தாங்காது அவள் நாய் அழுததும்
பட்டுப்போன கனவா?
பழங்கதையா?
இதயமென்ன இத்துப்போன சருகா?
யாருக்காய் யார் அழுவது?
பாருக்குள் இல்லை நீதி.

## திருவிழாக்கடைகளெங்கும் சிவப்பு பலூன்கள்



இ.சு.முரளிதரன்

நெகிழ் சட்டங்களால் சடைக்கிறது
வண்ணத்துப் பூச்சிகளை
பொரித்துச் சப்பும்
வன்மாளிகளின் தெருவியல்

அடைக்கோழிகளின் உதட்டில்
மஞ்சட்கரு வாசனை
பள்ளிச் சீருடை பொசுங்குமாறு
வெண்கட்டியின் மூச்சுக்காற்று
காவிநாம்பனால் மேயப்படும்
முலையிலிக்குருத்து

இறை நம்பிக்கை நிரவித் ததும்ப
கோவில் நோக்கிப் பறந்த தும்பி
சிவப்பு பலூனைக் கையுட் பொத்தியபடி
தலையின்றிச்
சாக்கடையில் மிதக்கிறது

புதிர்மைப் பருவத்து
முடிச்சியம் குறித்த புரிதலற்று
கயிறுகளின் பயணம்
அந்தகார வளைவில் அவிழாளிகள்.

## ஏமாற்றம்



கொற்றையூர் சிவசிவகுமார்

உரிமைக் குரல் விற்று
சீட்டு வாங்க
சிங்கத்தின் வால்களை தடவினேன்
இலத்திகளே பரிசாகின

கால்கள் இல்லாதவர்கள் கூட
மலையேறும் போது
கால்கள் இருந்தும்
கடவுளாய் கரை சேர்ப்பாய்
என்றிருந்தேன்
தோல்விகளே என்னைத் தழுவின

அண்ணாந்து பார்க்கின்றேன்
எட்டாத உயரத்தில் எல்லோரும்
நானோ
உன் அடி வருடியதால்
அதல பாதாளத்தில்
தனிமை இருளில் தத்தளிக்கிறேன்

காப்பாற்ற
நீயுமில்லை யாருமில்லை

# அன்று அடிமைகள் இன்று அரசர்கள்


லோகேஸ் முருகன்



தமிழன் இல்லாத நாடில்லை. ஆனால் தமிழனுக்கென்று ஒரு நாடில்லை!' - இது முதுபெரும் தமிழ்ப் புலவர்கள் பலரின் ஆதங்கம். இன்று உலக வரைபடத்தில் குண்டுசி முனை அளவுக்குத் தெரிகிற சின்னச்சின்ன தீவுத் தேசங்களில் கூட தமிழர்கள் இருக்கிறார்கள். சில இடங்களில் ஆளும் அதிகாரத்தைக் கூடக் கைப்பற்றி விட்டார்கள். பல இடங்களில் அசைக்க முடியாத பொருளாதார சக்தியாக இருக்கிறார்கள். சில நாடுகளில் உதையும் வாங்குகிறார்கள். அதிகபட்சம் போனால் நான்கைந்து தலைமுறைகளுக்கு முன்னால்தான் இவர்கள் தமிழ் மண்ணிலிருந்து புலம் உயர்ந்திருக்கிறார்கள். ஆனால் யாருக்குமே, அவர்கள் எந்த ஊரிலிருந்து வந்தார்கள். அவர்களுடைய பாட்டன், முப்பாட்டனுக்கு சொந்தங்கள் இந்தியாவில் இருக்கிறார்களா என்று எதுவுமே தெரியாது. இவர்கள் எப்படி, ஏன் அங்கே எல்லாம் போனார்கள்? துப்பாக்கிகளோடு ஆப்பிரிக்காவுக்குப் போன வெள்ளையர்கள் அங்கிருந்த கறுப்பர்களை அடித்து விலங்கிட்டு, கப்பலில் மூட்டைகளைப் போல ஏற்றி வந்து ஒவ்வொரு நாட்டிலும் வெள்ளை முதலாளிகளிடம் விலை பேசி விற்றனர். அந்த ஆப்பிரிக்க அடிமைகளுக்குச் சற்றும் குறைவில்லாத ஒரு ரத்த வரலாறு இந்தப் புலம்பெயர்ந்த இந்தியர்களிடமும் புதைந்திருக்கிறது. இப்போது வசதியாக வாழும் இவர்களுக்காக இவர்களது முன்னோர்கள் கொடுத்த விலை? சொல்லில் வடிக்க முடியாத ஒரு இருட்டு வரலாறு.

பிரிட்டன் அரசு 1838-ம் ஆண்டில் அடிமை முறையை ஒழித்துச் சட்டம் கொண்டுவந்தது. அப்போது பிரிட்டனிலோ, பிரான்ஸிலோ இருந்த வெள்ளை பசுபிக் பெருங்கடல்களில் பெரிய பெரிய தீவுகளே சொந்தமாக இருந்தன. அங்கெல்லாம் விவசாயம்தான் பிரதானம். அங்கு லட்சக் கணக்கான ஏக்கரில் கறுப்பு அடிமைகள் உழைத்து தங்கள் கண்ணீரையும், வியர்வையையும் சிந்த, உப்புக் கரிக்கும் அந்த உழைப்பிலிருந்து வந்த சர்க்கரை, ஐரோப்பாவுக்கு கப்பலில் போகும். அடிமை முறை ஒழிக்கப்பட்டதும், தங்கள் கை களைக் கட்டி வைத்திருந்த இரும்புச் சங்கிலிகளை டிஷ் ஆட்சிக்கு எதிராக கலகங்களுக்கு பிள்ளையார் சுழி போடப்பட்ட நேரம் இது! பிழைப்பு தேடி வந்தவர்களுக்கு வயிற்றுக்குச் சோறு கூட கிடைக்கவில்லை. அவர்களை ஏதோதோ பொய்களைச் சொல்லி சுலபமாக கப்பலில் ஏற்றி விட முடிந்தது. இந்தியர்கள் உடல் உழைப்புக்குச் சளைக்காதவர்கள் எல்லாக் கஷ்டங்களையும் சமாளித்து வாழப் பழகியவர்கள்.

1838-ம் ஆண்டு தொடங்கி 1917-ம் ஆண்டு வரை இப்படி கூலிகளை ஏற்றுமதி செய்வது தொடர்ந்தது. அந்த எண்பது ஆண்டுகளில் இப்படி கரீபியன் தீவுகளுக்குக் கடத்தப்பட்டவர்கள் ஐந்து லட்சம் பேர். இதில் அதிகம் பேர் போனது தமிழகத்திலிருந்து தான்! இதில் செத்துப் போனவர்களின் கணக்கு யாருக்கும் சரியாகத் தெரியாது. போனவர்கள் யாருக்குமே தாய் மண்ணை மறுபடியும் தொடமுடியாத தொலைவுக்குப் போகிறோம் என்று தெரியாது. சென்னை, புதுவை, காரைக்கால் என எல்லாத் துறைமுகங்களும் அப்போது இதில் பயங்கர பிஸி! அந்தச் சமயத்தில், அதிகம் படிக்காத தமிழர்கள் அறிந்த ஒரே தூரப் பிரதேசம் அந்தமான். 'அந்தமானில் கரும்பு வெட்டும் வேலை. ரெண்டு நாளில் கப்பலில் போயிடலாம். ஒரு வருஷம் வேலை பார்த்தால் சம்பாரிச்சிகிட்டு வந்துடலாம்' என்று ஆசைகாட்டி நிறையப் பேருக்கு வெள்ளைப் பண்ணையாளர்களின் ஏஜென்ட்கள் வலை விரித்தார்கள். யார் யாரை வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும் என்பதில் ரகசிய விதிகளே இருந்தன. எழுதப்படிக்க தெரியாதிருக்கக்கூடாது. உயர்சாதிக்காரர்களாக இருக்கக்கூடாது, ஆரோக்கியமான உடற்கட்டோடு இருக்க வேண்டும், கலகம் செய்யும் மனோபாவம் கொண்டவர்களாக இருக்ககூடாது என ஏகப்பட்ட விதிகள். எங்கேயாவது போய்ப் பஞ்சம் பிழைத்தால் போதும் என்ற முடிவுக்கு வந்த பலர் கப்பலில் ஏறினர். பலர் தங்கள் குடும்பங்களில் 'போய் சம்பாரிச்சிட்டு வந்து உங்களை ஜாம்ஜாம்னு தாங்கறேன்' என்று உறுதிமொழி கொடுத்து விட்டுப் போனார்கள். கப்பலில் ஏறிய பிறகு தான் விஷயம் தெரிந்தது. அவர்கள் பத்து ஆண்டுகள் வேலை செய்யவேண்டும் என்ற ஒப்பந்தப் பத்திரத்தில் கைநாட்டு வைத்திருக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு கப்பல் நிற்காமல் போய்க் கொண்டே இருந்தது. சில இடங்களில்



காத்திருந்தது. குதிரை லாயம் மாதிரியான கொட்டகையைப் பத்து அடிக்கு ஒரு அறையாகத் தடுத்திருந்தார்கள் ஒரு குடும்பத்திற்கு. தினமும் பன்னிரண்டு மணி நேர வேலை. வெயில், மழை, உடம்புக்குக் காய்ச்சல் என்று எந்தக் காரணமும் எடுபடாது! தவறினால் கசையடி. வேலை செய்யும் இடத்திலிருந்து இரண்டு மைல் சுற்றுலாவைத் தாண்டி எங்காவது அவர்களைப் பார்த்தால், ஒப்பந்தத்தை மீறி ஓட முயன்றதாக இரண்டு மாதம் ஜெயிலில் அடைத்து விடுவார்கள். புது நாடு. அது எந்த நாடு




வெயில் கொளுத்தியது. பல இடங்களில் குளிர் வாட்டியது. எங்கு பார்த்தாலும் தண்ணீரே தெரிந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை தரையே காணோம். மிகக் கொடூரமான பயணம் அது! கப்பலின் அடித்தளத்தில் உணவுப் பொருட்கள். அதற்கு மேல் அடுக்கில் கூலிகள் அதையும் தாண்டி மேல்தளத்தில் வெள்ளை அதிகாரிகள் காற்று கூட அதிகம் வராத கூண்டு மாதிரி அறையில் தண்ணீர் எல்லாமே ரேஷன்தான்! பலர் வழியிலேயே வாந்தியெடுத்துச் செத்தார்கள். காலரா கண்டு செத்தவர்கள் அநேகம். நூறுபேர் போனால், அதில் பத்து பேராவது வழியில் இறந்து விடுவார்கள். மிச்சமிருப்பவர்கள், எல்லா பயங்கரங்களையும் தாண்டிப் போனால், ஏதோ ஒரு சொர்க்கத்தின் கதவு அவர்களுக்காகத் திறக்கும் என்று பூரணமாக நம்பினார்கள். ஆனால், பண்ணைகளில் அவர்களுக்கு மிக மோசமான வாழ்க்கை

என்று கூட அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பேசும் மொழியும் புரியாது. சொந்த நாட்டுக்கு திரும்பும் வழியும் தெரியாது. தாங்கள் ஆபத்தில் இருக்கிறோம் என்று ஊருக்கு கடுதாசி போடுமளவுக்கு எழுதப் படிக்கவும் தெரியாது. தங்கள் விதி இதுதான் என்று அவர்கள் முடிவு செய்துவிட்டனர். கறுப்பர்களுக்கோ அவர்களுக்கு பதிலாக இந்தியர்கள் வந்து செட்டிலானதில் ஏகக் கடுப்பு. திடீர் திடீரென வந்து இந்தியர்களைத் தாக்கினர். குடும்பத்தோடு போன ஒரு சில இந்தியர்களுக்கு எல்லாவிதத்திலும் பிரச்சனை. அவர்களது மனைவி, மகள்களைக் காப்பாற்றுவதே பெரும் வேலையாக ஆனது. ஒருபுறம் வெள்ளைப் பண்ணை மானேஜர்கள், அத்துமீறிநுழையும் கறுப்பர்கள், தனியாக வேலைக்கு வந்து தவிக்கும் இந்தியர்கள் என எல்லோரது பார்வையும்

(13 ஆம் பக்கம் பார்க்க)

# க.பொ.த. உயர்தரம்
# பல்கலைக்கழக பிரவேசம் தொடர்பான பாட சேர்மானங்கள்




## கலைத்துறை

### தொகுதி - I

**சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூகக் கற்கைப் பாடங்கள்**

1. பொருளியல்
2. அளவையியலும் விஞ்ஞான முறையும்
3. புவியியல்
4. அரசியல் விஞ்ஞானம்
5. மனைப்பொருளியல்
6. கணக்கீடு அல்லது வணிகப்புள்ளி விபரவியல்
7. விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம்
8. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
9. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
10. பௌதீகவியல்
11. வரலாறு : இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு
    அல்லது
    இலங்கை வரலாற்றுடன் ஐரோப்பிய வரலாறு
    அல்லது
    இலங்கை வரலாற்றுடன் உலக வரலாறு
12. கீழ்வரும் தொழில்நுட்ப பாடங்களில் ஒரு பாடம்

குடிசார் தொழில்நுட்பவியல் அல்லது பொறிமுறைத் தொழில்நுட்பவியல் அல்லது மின் இலத்திரன் தகவல் தொழில்நுட்பவியல் அல்லது உணவுத் தொழில்நுட்பவியல் அல்லது விவசாயத் தொழில்நுட்பவியல் அல்லது உயிர்வளத் தொழில்நுட்பவியல்

### தொகுதி - II

**சமயங்களும் நாகரிகங்களும்**

1. பௌத்தம் அல்லது பௌத்த நாகரிகம்
2. இந்துசமயம் அல்லது இந்து நாகரிகம்
3. இஸ்லாம் அல்லது இஸ்லாம் நாகரிகம்
4. கிறிஸ்த்தவம் அல்லது கிறிஸ்தவ நாகரிகம்
5. கிரேக்க உரோம நாகரிகம்

### தொகுதி - III

**அழகியற் பாடங்கள்**

1. சித்திரம்
2. நாட்டியம் (தேசிய அல்லது பரதநாட்டியம்
3. சங்கீதம் (கீழைத்தேய சங்கீதம் அல்லது கர்நாடக சங்கீதம் அல்லது மேலைத்தேய சங்கீதம்)
4. நாடகமும் அரங்கியலும் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)

### தொகுதி - IV

**மொழிப் பாடங்கள்**

1. சிங்களம் தமிழ் ஆங்கிலம்
2. அரபு, பாளி, சமஸ்கிருதம்
3. சீனம், மலாய், பிரேஞ்சு, ஜேர்மன், ருசியன், ஹிந்தி, யப்பான்

கலைத்துறை மாணவர்கள் தொகுதி I இல் குறைந்த பட்சம் ஒரு பாடத்தையேனும் தெரிவுசெய்து கொள்ளல் வேண்டும். எனினும் மொழிப் பாடங்கள் இரண்டினை அல்லது மூன்றினை தெரிவுசெய்பவர்களுக்கு இது பொருந்தாது.

❖ தொகுதி I இல் ஒரு பாடத்தை அல்லது இரண்டு பாடத்தை அல்லது மூன்று பாடத்தையும் தெரிவுசெய்து கொள்ளலாம்.

❖ தொகுதி II இல் ஏதேனும் ஒரு சமயத்தை தெரிவு செய்தால் அச்சமயம் தொடர்பான நாகரிகப் பாடத்தை தெரிவுசெய்ய முடியாது.

❖ தொகுதி III இல் அழகியல் பாடம் ஒன்றினை அல்லது இரண்டினை தெரிவு செய்து கொள்ள முடியும்.

❖ தொகுதி IV இல் மொழிப் பாடம் ஒன்றினை அல்லது இரண்டினை தெரிவு செய்து கொள்ளமுடியும்.

மூன்றினையும் மொழிப் பாடமாக தெரிவுசெய்யின் அது கீழ்வரும் தன்மையில் அமைதல் வேண்டும்.

● சிங்களம், தமிழ், ஆங்கிலம் அல்லது ● அரபு, பாளி, சமஸ்கிருதம்

இரண்டு கட்டங்களிலும் உட்படக்கூடிய மூன்று பாடங்கள்

தொகுதி IV இல் மொழிப்பாடங்கள் இரண்டினை தெரிவுசெய்பவர் மூன்றாவதாக தொகுதிகள் I, II, III என்பவற்றில் யாதேனும் ஓர் பாடத்தை தெரிவுசெய்யலாம்.

## வர்த்தகத் துறை

### தொகுதி - I

1. கணக்கீடு
2. வணிகக்கல்வி
3. பொருளியல்

### தொகுதி - II

1. வணிகப்புள்ளி விபரவியல்
2. அளவையியலும் விஞ்ஞான முறையும்
3. புவியியல்
4. அரசியல் விஞ்ஞானம்
5. ஆங்கிலம்
6. ஜேர்மன்
7. பிரேஞ்சு
8. விவசாய விஞ்ஞானம்
9. இணைந்த கணிதம்
10. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
11. வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது இலங்கை வரலாற்றுடன் ஐரோப்பிய வரலாறு அல்லது இலங்கை வரலாற்றுடன் உலக வரலாறு)
12. பௌதிகவியல்

❖ வர்த்தக மாணவர் தொகுதி I இல் குறைந்த பட்சம் இரண்டு பாடத்தை தெரிவுசெய்துகொள்ளல் வேண்டும்.

❖ தொகுதி II இல் மூன்றாவது பாடத்தை தெரிவுசெய்து கொள்ளலாம்.

❖ தொகுதி I இல் குறைந்த பட்சம் இரண்டு என்பதன் உட்கிடை தொகுதி I இல் இரண்டு பாடங்களையோ அல்லது மூன்று பாடங்களையுமே தெரிவு செய்யலாம் என்பதே. எனினும் தொகுதி I இல் கணக்கீடு பாடத்தினை கட்டாயம் தெரிவுசெய்யும்போதே வர்த்தக மாணவர்கள் முகாமைத்துவ கற்கைகளை சில பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ள முடியும். எனவே கணக்கீடு வர்த்தக மாணவர்களுக்கு கட்டாயமில்லை எனினும் சில பல்கலைக்கழகங்களில் வர்த்தகத்துறை சார் உயர் கற்கைகளுக்கு அவசியமாதலால் கணக்கீடு வர்த்தக மாணவர்களுக்கு கட்டாயமாகின்றது.

பொருளியலோ வர்த்தகமோ எந்தவகையிலும் கட்டாயமானதல்ல. எனவே இவற்றில் ஏதேனும் ஒன்றை விடுத்து தொகுதி II இல் உள்ள ஏதேனும் ஒரு பாடத்தை தெரிவுசெய்து படிப்பது தெரிவுசெய்யும் மாணவர்களுக்கு அனுகூலமாகலாம்.


தொகுப்பாக்கம் : செல்வி V. அட்ஷயா


(தொடர்ச்சி அடுத்த இதழ்களில்)

# தமிழ்மக்கள் பேரவை

## ஓர் அறிமுகப் பார்வை

லைசியன்





அரசியல் என்ற எல்லை கடந்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்று எடுப்பதை நோக்கமாக்கி வடக்கு மகாண முதலமைச்சர், நீதியரசர் சி.வி. விக்கிணேஸ்வரன் அவர்களின் இணைத்தலைமையில் உருவாக்கம் பெற்றுள்ள தமிழ் மக்கள் பேரவை தொடர்பாக ஆதரவுக்கருத்துக்கள் பெருகி வரும் நிலையில் எதிர்க்கருத்துக்களும் கிளைவிட்டுள்ளன. தமிழ்த் தேசியப் பற்றுக்கொண்ட நெஞ்சங்களிலே புத்தாக்கமாய், நிரந்தரமான தீர்வுக்கான வடிகாலாய் தமிழ் மக்கள் பேரவை துளிர்க்கவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்புக்கள்.

எமது அரசியல் பிரமுகர்களும் முன்னுக்குப் பின் முரணாகவும் வரவேற்றும் எதிர்த்தும் கருத்துக்களைப் பதிவுசெய்துள்ள நிலையில் சில ஊடகங்கள் தமது கருத்துக்களை நேரடியாகச் சொல்ல திராணியற்று மக்கள் தெரிவித்துள்ளனர் என்ற கூற்றைப் பயன்படுத்தி வழமை போல் மக்களை குழப்பவும் முயன்றுள்ளன.

நமது ஊடாக வெளிகளை ஆழ்ந்து நோக்குவோமாக இருந்தால் ஊடகவெளிகள் ஒவ்வொன்றிலும் ஏதோவொரு சார்பு தொனிப்பதை உணரலாம். சார்புகள் இருப்பதை தவிர்க்கவும் இயலாது. ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் ஏதோவொரு கொள்கைக்கோ கட்சிக்கோ நிறுவனத்திற்கோ சார்பு மனப்பட்டவர்களாக, வெவ்வேறுபட்ட காலகட்டங்களில் வெவ்வேறு சார்பு உடையவர்களாகவேதான் இருந்திருக்கின்றார்கள், இருக்கின்றார்கள்.

இவ்வாறான மாறுபட்ட முரண்பட்ட சிந்தனைகள் தான் அறிவியில் வளர்சசிக்கு அடித்தளம் என்பதும் அசைக்க முடியாத உண்மை. எனினும் தங்கள் சார்புக் கருத்துக்களை நேரடியாக சொல்லாது யார் யாரோ பால் திணித்து தப்பிக்க முனைவது ஊடக தர்மம் ஆகாது.

கட்சி பேதங்கள் கடந்து தாயகமக்களின் ஏகோபித்த குரலாய் தார்மிக வழியில் ஜனநாயக நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுத்தர எத்தனிக்கும் தமிழ் மக்கள் பேரவை நின்று நிதானித்து கடந்த கால தவறுகளை களைந்து அறிவைப் புதுப்பித்து சாத்திய வழியில் நடைபோட்டு தமிழர்களுக்கான தீர்வை பெற்றுத்தருமாக இருந்தால் மகிழ்ச்சி எல்லோருக்கும்தான். அரசியலுக்கு அப்பால் தமிழ்த்தலைமைகள் மக்கள் நலன்களில் ஒன்றித்து ஆக்கம் செய்தால் எமது தேக்கங்கள் எல்லாம் தொலைந்து புத்தக்கங்கள் விளைவாக நாளை நமதாகும். தலைமைகளே சிந்தியுங்கள் அரசியல் உங்களுக்கானது அல்ல, மக்களுக்கானது. கடந்தகாலங்கள் போல் வெறும் வார்த்தை ஜாலங்களால் காலம்கடத்தி மக்களின் எதிர்பார்ப்புக்களை எகிறவிட்டு இறுதியில் எல்லாம் புஸ்வாணம் ஆவது போல் தமிழ்மக்கள் பேரவையின் செயற்பாடுகளும் ஆகிவிடக்கூடாது.







## புற்றுநோயைத் தடுக்கும்

# கற்றாளை

வெறும் நூறு ரூபாயில் புற்று நோயை முற்றிலும் அழிக்க , வராமல் தடுக்க ஒரு சிறந்த கை மருந்து !

புற்று நோய் வந்து விட்டது என்றாலே சகல சப்த நாடிகளும் ஒடுங்கிப்போய் தளர்ந்து விடுவார்கள். அருகில் இருந்து பார்த்தவர்களுக்குத் தான் தெரியும் , சிங்கம் போலே சிலுப்பிக் கொண்டு இருந்த பலரை, வேரோடு சாய்த்து விடும் தன்மை. இந்த புற்று நோய்க்கு உண்டு. இப்போது ஓரளவுக்கு மெடிக்கல் உலகம் சில மருந்துகளை கண்டு பிடித்து, குணப்படுத்த நடவடிக்கை எடுத் தாலும், பணம் இருப்பவர்கள் மட்டுமே அந்த சிகிச்சை மேற்கொள்ள முடியும்.

இந்நிலையில் புற்று நோயை , படிப் படியாக முற்றிலும் குணப்படுத்த ஒரு எளிய வைத்தியம் ஒன்றை பிரேசில் நாட்டில் பிறந்தவரும் சிறந்த மருத்துவரும் பாதிரி யாருமாகிய குச ரோமனோ சகோ (Fr Romano Zago) என்பவர் கண்டுபிடித் துள்ளார்.

இவர் கண்டு பிடித்த இம்மருந்தை புற்று நோயால் மிக கடுமையாக பாதிக்கப் பட்டவர்கள்கூட உபயோகித்து குணமடைந் துள்ளனர். .

இனி இம்மருந்தை எப்படி தயாரிப்பது என்பதை பார்ப்போம். இதில் பயன்படுத்தப் படும் மூலிகை எங்கும் எளிதாக கிடைக்கும் சோற்று கற்றாழை ஆகும் .

சோற்று கற்றாழை 400 கிராம்
சுத்தமான தேன் 500 கிராம்
whisky(or) brandy 50 மில்லி
(மருந்தாக மட்டும் பயன்படுத்துக)

### தயாரிப்பு முறை

சோற்றுக் கற்றாழையை எடுத்து பக்கவாட்டில் உள்ள முட்களை நீக்கி கொள்ள வேண்டும். தோலை நீக்கிவிடக்கூடாது. தோலை சுத்தமான துணியினால் துடைத்துக் கொள்ளவேண்டும் அடுத்த படியாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறியதாக கற்றாழையை நறுக்கிக் கொள்ளவேண்டும். நறுக்கப்பட்ட துண்டுகளை ஒரு பாத்திரத்தில் கொட்டி தேன் மற்றும் whisky (or) brandy யுடன் சேர்த்து ஒரு கரண்டியால் நன்றாக கலக்க வேண்டும். இப்போது மருந்து தயாராகி விட்டது

### மருந்தை உட்கொள்ளும் விதம்

இம்மருந்தை தினமும் மூன்று வேளை உணவு அருந்துவதற்கு 30 நிமிடத் திற்கு முன்பு 15 ml வீதம் உண்ண வேண்டும். ஒவ்வொரு முறை பயன்படுத்தும் போதும் மருந்தை நன்றாக குலுக்கிக் கொள்ளவேண்டும. மேலே சொன்ன அளவில் செய்தால் பத்து நாட்களுக்கு இந்த மருந்து வரும். மருந்து தீர்ந்தவுடன் 10 நாள் கழித்து மீண்டும் தயாரித்து உண்ணவேண்டும. பத்து நாட்களுக்கு மேல் மருந்தை storage செய்ய கூடாது.

இடையிடையே மருத்துவ பரி சோதனை செய்து கொண்டு நோய் நன்கு குணமாகும் வரை மருந்தை உட்கொள்ள வேண்டும் .சிலருக்கு மிக குறுகிய காலத்தி லேயே இதன் மூலம் நிவாரணம் கிடைத் துள்ளது.

இது மிகவும் எளிதான சக்தி மிகுந்த மருந்து ஆகும் . மருந்தை குளிர்சாதன பெட்டியிலோ அல்லது அதிக வெப்பம் இல்லாத இடங்களிலோ காற்று புகாத பாட்டிலில் வைத்திருப்பது நல்லது .

உங்களால் முடிந்தவரை உங்கள் நட்பு வட்டாரத்தில் இதை தெரியப்படுத்துங்கள். யாரோ ஒருவருக்கு இது மிக தேவையான தாக இருக்க கூடும். ! சிகரெட் பிடிக்கும் அனை வரும் உடனடியாக, புகை பழக்கத்தை நிறுத்தி, இந்த மருந்தை உட்கொள்ள ஆரம் பித்தல் நல்லது. ஒரே ஒரு நிமிஷம், உங் களுக்கு புற்று நோய் வந்துடுச்சுனு டாக்டர் சொல்றதா நினைச்சுக்கோங்க.. கண் முன்னாலே உங்க மனைவி, குழந்தைகள், வயசான அப்பா , அம்மா எல்லோரும், நீங்க இல்லாம கஷ்டப்படப் போறதை நினைச்சுப் பாருங்கள். நிச்சயமாக நீங்கள் நல்ல மனி தனாக இருந்தால் இனிஒருபோதும் உந்த கறுமங்களை தொடமாட்டீர்கள்

நன்றி - இணையம்


சாதாரண தரத்தின் பின்னர்...

உலகை வென்றிட மிகமுக்கியமான உலக மொழியான

IT மற்றும் ஆங்கில

அறிவினால் உங்கள் பிள்ளைகளை சக்திபெறச் செய்யுங்கள்



ESOFT Shaping Lives. Creating Futures.

சாதாரண தரத்தை முடித்த மாணவர்களுக்காகவே விசேடமாக நடாத்தப்படும் IT மற்றும் ஆங்கில டிப்ளோமாக்களுக்கு இன்றே உங்கள் பிள்ளைகளை விண்ணப்பிக்கச் செய்யவும்

assured by PEARSON — இப்பாட நெறிகள் பிரித்தானிய Pearson நிறுவனத்தின் தரச் சான்றிதழைப் பெற்றது

DiTEC INTERNATIONAL — Diploma in Information Technology
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிக் கட்டணம் : ரூ. 26,500

DiE — Diploma in English — ஆங்கில உரையாடல் அடங்கிய DVD இலவசம்
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிக் கட்டணம் : ரூ. 19,500

விசேட குறிப்புகள்
- உயர் தரம் ஆரம்பிக்கும் முன்ன பாடநெறிகள் முழுமைப்படுத்தப்படும்
- உயர் தர மேலதிக வகுப்புக்கள் பாதிக்கப்படாத முறையில் குழுவினை தெரிவு செய்யலாம்
- ESOFT சான்றிதழுடன் பிரித்தானிய Pearson (Edexcel) சான்றிதழும் வழங்கப்படும்
- பாடநெறி கட்டணத்தினை தவணை முறையிலும் செலுத்தலாம்

பாடநெறி ஆரம்பம்

பதிவுகளை செய்வதனால்
ரூ. 16,375 சேமியுங்கள்

இரட்டை டிப்ளோமாவிற்கான சாதாரண கட்டணம் › ரூ. 46,000
இரட்டை டிப்ளோமாவிற்கான கழிவுடனான கட்டணம் › ரூ. 29,625

கழிவுகள் வழங்கப்படும் முறை
25%* முதல் டிப்ளோமாவிற்கு
50%* இரண்டாம் டிப்ளோமாவிற்கு

ESOFT METRO COLLEGE-NELLIADY
இலங்கையின் பாரிய தனியார் உயர் கல்வி வலையமைப்பு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 011-7555550 | கேகாலை | 035-2222045 | அநுராதபுரம் | 025-5670513 | அம்பலாங்கொடை | 091-5704504 |
| கண்டி | 081-2204400 | கிளிநொச்சி | 021-2285444 | பண்டாரவளை | 057-2224042 | சிலாபம் | 032-2222577 |
| குருநாகல் | 037-2223945 | ஹட்டன் | 051-7388053 | எம்பிலிபிட்டிய | 047-2261845 | நாரம்மல | 037-7526560 |
| நீர்கொழும்பு | 031-2227990 | ஹோமாகம | 011-2891675 | அவிசாவளை | 036-2230332 | நுகேகொடை | 011-7555571 |
| மாத்தறை | 041-2233550 | அம்பாந்தோட்டை | 047-2220940 | பொலன்னறுவை | 027-7501130 | மாத்தளை | 066-7501122 |
| காலி | 091-7501125 | கிரிபத்கொடை | 011-7555535 | இரத்தினபுரி | 045-2230005 | ஜா-எல | 011-2229766 |
| கம்பஹா | 033-7388051 | பத்தரமுல்ல | 011-4932293 | திருகோணமலை | 026-7267200 | பிலியந்தலை | 011-2608672 |
| யாழ்ப்பாணம் | 021-2224142 | குளியாபிட்டி | 037-2284621 | வவுனியா | 024-7694050 | நுவரெலியா | 052-7755400 |
| மட்டக்களப்பு | 065-7200070 | மிறிஹானகொடை | 011-2280770 | வென்னப்புவ | 031-2252520 | தெல்லிப்பழை | 021-2264940 |
| வத்தளை | 011-7555530 | மொனராகலை | 055-2055444 | பாணந்துறை | 038-7389040 | பதுளை | 055-7796957 |
| கல்முனை | 067-3673555 | நாவலப்பிட்டி | 081-5633725 | களுத்துறை | 034-7388050 | கெக்கிராவ | 025-2265231 |

HOTLINE 077 15 47 677

Follow us on

www.esoft.lk



உயிர்மெய்

பிரதேசரீதியாக......

★ சந்தா சேகரிப்பாளர்
★ விளம்பர முகவர்
★ விநியோகஸ்தர்

போன்ற ஆளணிகளை எதிர்பார்க்கின்றது.
ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரங்களை உடனடியாக அனுப்பிவைக்கவும்.

உயிர்மெய் பதிப்பகம்,
புலோலி. பருத்தித்துறை

E.mail :-uyirmey27@gmail.com
T.P: 021 568 5381

*உலகநாயகன் கமல்ஹாசனின் குருதிப்புனல், சுஜாவின் உயிர் வியூகம் போன்ற கதைகளைத் தழுவி உருவாக்கப்பட்டது*

உயிர்மெய் இவ்வார சிறப்புக் கதை

# மாற்றம்

தென்பொலிகை குமாரதீபன்

உலகப் பிரசித்த வர்த்தக நகரம்–

ஒளிச்சிதறல்களாய் முப்பரிமாண வெளிகளில் விளம்பரங்கள் தமிழ், சிங்கள மொழிகளோடு வியாபித்திருக்க .......

பகலிரவாய் விழித்திருக்கும் தூங்காநகரத்தின் இயங்கு வீச்சை குறைந்திருந்தது சில நிமிடங்களுக்கு முன் வளித்திரையில் விரிந்திருந்த அந்த கொடூர கொலைச் சம்பவம்.

தமிழ் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கீர்த்திவாசன் சிங்களம் பேசும் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்படுதல் ஒளி இடுகையால் பல கோணங்களிலும் உள்வாங்கப்பட்டு வளித்திரையில் உலகமெங்கும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதி நேரடியாகவே வளித்திரையில் தோன்றி மக்களை அமைதிப்படுத்தினார். அவசர கலந்தாய்விற்காக பிரதமர் மாளிகையில் திரண்டிருந்தனர் அரச பிரதானிகள். மீண்டும் இவ்வாறானதொரு சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் சம்பவதாரர்களை எப்படிப்பிடிப்பது வியூகங்களை சிந்தித்துக் கொண்டிருந்தது இராணுவ மேலிடம்.

............................................................

கடல் நீல விரிப்புள் பல ஆயிரம் கடல்மைல்கள் பிரயாணம் செய்து முடிவாக ஒரு இறங்குதுறையில் நீர் கிழித்து மேல் வந்து நங்கூரம் பாய்ச்சியது எதிரி நாட்டு நீர்மூழ்கி. சூழ்நீர்த் தாரைகள் விலக உள்ளொளிர் விளக்குகள் அணைக்கப்பட நீர் மூழ்கியின் கண்ணாடிச் சுவர்களை ஊடறுத்து உள்படர்ந்த ஒளி வெள்ளம் மூழ்கியின் அணியப் பகுதியில் மல்லாத்திக் கிடத்தப்பட்டிருந்த தளபதி புவியரசனின் கண்களை உறுத்தின. புவியரசனின் கால்கள் கயிறுகளால் பிணைக்கப்பட்டிருந்தன. கைகளை விலங்குகள் கோர்த்திருந்தன. அடிகளின் தளம்புகள் உடலெங்கும் கன்றிச் சிவந்திருந்தன.

எதிரிநாட்டு வீரர்கள் புவியரசனின் தலையிலும் கால்களிலும் பிடித்து தூக்கி மேலே எடுத்து கீழே எறிந்தார்கள். புவியின் ஈர்ப்பில் இழுக்கப்பட்டு 'தொப்பென்று' மிதக்கும் மெத்தையில் விழுந்தான்.

'தொப்.. தொப் தொப் தொப்.."

தொடர்ந்து குதித்த எதிரிநாட்டு வீரர்கள் பலரும் புவியரசனை சூழ்ந்துகொள்ள எல்லோரையும் இழுத்து கரைதட்டியது மிதக்கும் மெத்தை. கடற்கரை மணல் வெளியில் சோபிக் கற்களின் உரசல்கள் மூளைக்கு இன்னும் உச்ச வலியை அனுப்ப தரதரவென்று இழுக்கப்பட்டு கரையண்டிய பாரிய நிலவறைக் கதவு திறக்கப்பட உள்ளே தூக்கி வீசப்பட்டான். பளிங்குத் தரை வழுக்கினாலும் கண்டல் காய உரசல்கள் ரண வலியை உண்டுபண்ண மூச்சை ஆழமாக இழுத்து சக்தியை கூடியவரை சேமித்து நெடுமூச்செறிந்தான் தளபதி புவியரசன்.

நிலவறைக் கதவு இறங்கிக் கொண்டிருக்க அதனையும் தாண்டி கடலலைகள் ஆர்ப்பரித்தும் கொண்டிருந்தன.

............................................................

சிங்களம் பேசும் ஆயுததாரிகளின் துப்பாக்கி வீச்சுக்களில் தமிழ்பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கீர்த்திவாசன் கொலை செய்யப்பட்டமை வளித்திரை விரிப்பில் விரிந்த பதகளிப்பு இன்னும் ஓயாத சூழமைவுகளில் தளபதி புவியரசனும் கடத்தப்பட்டமை பிரளயமாய் மக்கள் மனங்களில் ஏக்க வீரியங்களை விஸ்தீரணப்படுத்த வளித்திரை விரிப்புக்கள் மக்களை ஆற்றுப்படுத்துவதற்கான எத்தனங்களாய் காட்சி நிலைகளை சீர்மியப்படுத்தின. காட்சிகளோ வரி வீச்சுக்களோ துளியேனும் தேசிய உணர்விற்கோ அமைதிக்கோ மாறு விளைவிக்காத வகையில் கவனம் காத்தன.

............................................................

திராவக விளக்குகள் மங்கலாக வெளிச்சத்தை கசியவிட பளிங்குத் தரைகள் வெளிச்சத்தில் நனைந்து ஆங்காங்கே செங்கரும் திட்டுக்கள் தெறித்தன. சுரண்டிப் பார்த்தான் அவை திட்டுக்கள் அல்ல இரத்தக் கறைகள் புவியரசன் மீண்டும் மூச்சை ஆழமாக இழுத்துக் கொண்டான்.

கரடுமுரடான அதிவேகப் பயிற்சிகளில் உடல் பழக்கப்பட்டிருந்தாலும் எதிரிகளின் கை கால் வீச்சுக்கள் புவியரசனின் உடலை துவட்டிதுவம்சித்திருந்தன. அவன் அணிந்திருந்த இராணுவ உடை கீலச்சுக்கலாய் கிழிந்து இரத்தக் கசிவுகளில் புடைத்திருந்தது. கன்னங்களில் கன்றிப்போன திட்டுக்கள் வாய்க்குள் இரத்தத்தின் கசகசப்பு இமைகள் தோடஞ்சுளையாய் தடித்திருந்தன மூடியிருந்த போதும் விரிக்க முடியாத இமைகளை விரித்து அறையினுள் நோட்டம்போட்டான். அவனுடைய சாதாரண கண்களுக்கு கண்ணாடியோடு கண்ணாடியாக உள் அசைவுகளை நோட்டமிடுவதற்காக பொருத்தப்பட்டிருந்த நுண்ணிய படமாக்கிகள் புலப்படவே இல்லை.

............................................................

பாராளுமன்றம்

நடந்து முடிந்திருந்த துன்பியல் நிகழ்வுகளின் பின்னணிகள் என்னவாக இருக்கலாம்? பின்விளைவுகள் எவ்வகையிலும் மக்களைப் பாதிக்காத வகையில் எவ்வாறான நடவடிக்கைககளை மேற்கொள்ளலாம்? எதிர்கொண்டுள்ள இக்கட்டுக்களில் இருந்து தேசத்தை எவ்வாறு விடுவிக்காலம்?

கலந்தாடல்கள் தொடர்ந்தன. எவரும் அவசரப்படவில்லை. நிதானமாக உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காது அறிவு பூர்வமாக கருத்துக்களை விளைத்தனர். இனவாதம் மதவாதம், பிரதேச வாதம் எதுவுமில்லை.

நோக்கங்களை ஒரே இலக்கில் குவித்து கருத்துக்களை விளைத்தனர். பிரதிநிதிகள் அவரவர் தாய் மொழிகளில் கருத்துக்களை முன்வைத்தாலும் இருமொழிகளிலும் எல்லோருக்கும் புரிந்தன.

............................................................

நிலவறைக் கதவுகள் உயர எதிரிவீரர்கள் மூவர் உள்விரைய உயர்ந்த கதவு மீண்டும் கீழிறங்கிக்கொண்டிருந்தது. வந்தவர்களில் உயரமாக தடிப்பமாக இருந்தவன் புவியரசனின் தலைமுடியை கொத்தாக பிடித்து நிமிர்த்தி சுவரோடு மோதினான்.

"எங்களை யாரும் பிடிக்க முடியாது உயிர் பிரியும் வரை உடல் நாட்டிற்காக போராடுவோம் என்றெல்லாம் வீரமுழக்கம் செய்தீர்களே உங்கடை முழக்கங்கள் வெறும் வெற்று வேட்டுக்கள் தானா?

எகத்தாளமாக சிரித்த பெரியவன் புவியரசனின் விலாவில் எத்தியொரு குத்துவிட்டான்

"ஒரு காலத்தில் உணர்ச்சி மடையராய் மாறி மாறி இனவாதம் பேசும் உங்கடையாக்கள் இப்ப நிதான–மாய் கதைக்கிறாங்கள்.

ஊடகங்களும் பொறுப்புக்காக்கின்றன. நல்ல மாற்றம்தான்

ஆனால் ............."

ஆனால் ஆயிரம் அர்த்தம் சொல்ல உச்சுக் கொட்டினான் மற்றவன். விலாக்குத்தும் மயிர்க் கொத்துப் பிடியும் உஸ்ணவலியை கொடுத்தாலும் 'ஆனால்' உச்சுக்கொட்டால் கொடுத்த இறுமாப்பின் கர்வத்தில் வெடித்திருந்தாலும் உதட்டை கோணலாகச் சுழித்து புன்னகைத்த புவியரசனின் மனதிலே மக்களின் விழிப்பும் தெளிவும் இனம்புரியாத மகிழ்ச்சியை உண்டுபண்ணின.

'இனி எவனும் எங்கள் நாட்டை குழப்பமுடியாது இப்படிப்பட்ட மக்களுக்காக ஒரு தடவையென்ன ஆயிரம் தடவை சாகலாம்'

தளபதி புவியரசனின் மனவீரியம் ஆரோகரிக்க புன்னகையின் வீச்சும் அதிகரித்தது.

"உந்த நக்கல் நையாண்டிச் சிரிப்புக்களை உங்கடை ஆட்களோடை வைச்சுக்கொள்ளும்".

**தமிழ் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கீர்த்திவாசன் சிங்களம் பேசும் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்படுதல் ஒளி இடுகையால் பல கோணங்களிலும் உள்வாங்கப்பட்டு வளித்திரையில் உலகமெங்கும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.**



**எதிரிநாட்டு வீரர்கள் புவியரசனின் தலையிலும் கால் களிலும் பிடித்து தூக்கி மேலே எடுத்து கீழே எறிந்தார்கள். புவியின் ஈர்ப்பில் 'தொப்பென்று' மிதக்கும் மெத்தையில் விழுந்தான்.**

இனி எவரும் எங்கள் நாட்டை குடிப்பமுடியாது இப்படிப்பட்ட மக்களுக்காக ஒரு தடவையென்ன ஆயிரம் தடவை சாகலாம்"

# மாற்றம்

**நிலவறைக்கதவு உயர நமட்டுச் சிரிப்போடு உள்நோக்கி வந்து கொண்டிருந்தான் தளபதி மைத்திரிசேனா மைத்திரி நீயா? புவியரசனின் குரலில் ஆச்சரிய அதிர்வுகள்**



ஆக்ரோசம் எகிற ஆவேசமாய் புறங்கையை வேகமாக வீசினான் பெரியவன். புவியரசனின் பல்லுடைந்து இரத்தம் கொப்பளித்தது.

"நாங்கள் யார்? ஏன் உன்னை கடத்தினோம் எதுவுமே உனக்கு தெரிய வாய்ப்பில்லை தெரியவும் தேவையில்லை ஆனால் இன்னும் கொஞ்ச நேரத்தில் உன்ரை சாவிரிப்பு உங்கடை நாட்டில் விளைக்கப்போகும் பிரளயச் சூறாவளி அடங்கும்போது உங்கடை நாடு சுடுகாடாகியிருக்கும்"

ஆர்வக்கோளாற்றில் திட்டவிரிப்பு செய்தவனின் கண்களில் வெறி..... தீராவெறி.

"ஏனிந்த வீண் கனவு ஆள்பதியாரே?

"ஆள்பதியாரே' என்பதை நக்கல் தொனிக்க அழுத்திச் சொன்னான் புவியரசன்

"ஆள்பதியா!? பெரியவன் திகைத்தான்"

"உயிர் பிரியும் வரை உடல் நாட்டுக்காக போராடும் என்பது வெறும் வெற்று முழக்கமல்ல நீங்கள் துண்டு துண்டாய் வெட்டித் தீர்த்தாலும் இனி ஒரு போதும் எங்கள் தேசத்தவர் மோதித் தீரமாட்டார்"

தீர்க்கமாய் உதிர்ந்த வார்த்தைகளில் நம்பிக்கை துளிர்க்க

"எங்கட நாட்டிலை கலவரம் உண்டு பண்ண அமைச்சர் கீர்த்திவாசனை கடத்தி கொலை செய்து வளித்திரை பிரச்சாரம் செய்தீர்கள்

எங்கடை மக்களின் தெளிவும் நாட்டுப்பற்றும் உங்கடை திட்டங்களை கைகூட விடவில்லை. மீண்டும் இன்னுமொரு நாடகம் ஆட என்னை கடத்தியுள்ளீர்கள்.

நிச்சயமாக உங்கடை திட்டம் ஒருபோதும் பலிக்கப்போவதில்லை.

இவன் புலனாய்வுத் தளபதி அவன் கடற்படைத் தலைவன் நீர் எதிரி நாட்டு ஆள்பதி மக்ஸ் ரீடர் சரியா? ஆள்பதி மக்ஸ்றீடர் என்பதை இன்னும் அழுத்தனான் புவியரசன்

"நீ அறிவாளிதான் எங்களை மட்டுமல்ல எங்கட திட்டங்களையும் உணர்ந்து அறிவு பூர்வமாக கதைக்கிறாய் கொஞ்சம் பொறு எங்கடை அறிவாளித் தனத்தை காட்டுறம்."

பொத்தானை அழுத்தினான் மக்ஸ்ரீடர். நிலவறைக்கதவு உயர நமட்டுச் சிரிப்போடு உள்நோக்கி வந்து கொண்டிருந்தான் தளபதி மைத்திரிசேனா.

மைத்திரி நீயா? புவியரசனின் குரலில் ஆச்சரிய அதிர்வுகள்

"நான்தான் நண்பா எப்படிப் பயணங்கள் நன்றாக வாட்டிவிட்டார்கள் போல" நக்கல் தொனியில் எகத்தாளமாகப் பேசியவன் புலனாய்வுத் தளபதியின் துப்பாக்கியை பறித்து இயங்கு நிலைப்படுத்தி புவியரசனின் மார்பில் அழுத்தினான்.

"துரோகி தாய்நாட்டை சூறையாட எத்தனிக்கும் எத்தர்களோடு கூட்டுவைத்து நீ என்னதான் சாதிக்கப்போறாய்"

ஆக்ரோசித்து உறுமினான் புவியரசன்

" துப்பாக்கி அழுத்தியும் தாய்நாட்டுப் பற்று சாகப்போகும் தருணத்திலும் மண்டியிடாமை அற்புதம்"

கெக்கட்டமிட்டு சிரித்தான் மைத்திரிசேனா.

"ஒரு காலத்திலை நாங்கள் எங்களுக்குள்ளேயே அடிபட்டு தொலைந்தோம். குண்டு வெடிப்புகளிள் துப்பாக்கி வீச்சுக்களில் கொத்துக் கொத்தாய் எங்கள் இன்னுயிர்களை பலிகொடுத்தோம். ஆனால் அறிவின் விழிப்பு எங்களை ஒன்றுபடுத்தியிருக்கு இந்த நேரத்திலை நீ இவங்களோடை சேர்ந்து சதிசெய்வது சரியல்ல மைத்திரி.."

"நீ எனக்குச் சரி சொல்கிறாயா?"

துவக்குச் சோங்கால் உந்தித் தள்ளினான் மைத்திரி.

கொத்துப்பிடி தளர கண்ணாடிச் சுவரோடு மோதிக் கீழே சுருண்டான் புவியரசன்.

"இனியும் காலம் கடத்த வேண்டாம் வளித்திரை விரிப்பிற்குரிய ஏற்பாடுகள் எல்லாம் சரி ஆயத்தமாகுங்கள்"

மக்ஸ்ரீடர் கட்டளையிட்டான்.

"சரிதுரை"

மைத்திரி தலையசைக்க புலனாய்வுத் தளபதியும் கடற்படைத் தலைவனும் புவியரசனை தூக்கி நிமிர்த்தி தமது முகங்களை முகமூடிகளால் உருமறைப்புச் செய்து கொள்ள

கண்ணாடிப் படமாக்கிகள் விழித்துக்கொண்டன.

..............................................................................................

படமாக்கிகள் பலகோணங்களிலும் நிலவறை நடப்புக்களை உள்வாங்கி ஒளி இடுகையில் சேமித்து நேரலையாக உலகமெங்கும் வளித்திரைசகளில் விரித்துக் கொண்டிருந்தன........

முகமூடி அணிந்த எதிரிவீரர்கள் தாய்நாட்டிற்காக கொஞ்சம் கொஞ்சமாக உயிர்விட்டுக் கொண்டிருக்கும் வீரத்தளபதி.

எத்தர்களின் எத்தல்களில் சக தோழனின் உயிரை வாங்க எத்தனிக்கும் துரோகத்தளபதி வளித்திரை கொலை விரிப்பில் கொதித்துக் கொண்டிருந்தன மக்கள் இதயங்கள்.

..............................................................................................

புவியரசனின் கைகால் பிணைப்புக்கள் எதிரிவீரர்கள் அவனைத்தூக்கி நிமிரத்த இடைஞ்சலாக புவியரசனின் கால்களின் பிணைப்புக்களை நீக்கிய மைத்திரி கைகளை கோர்த்திருந்த விலங்குகளையும் கழற்றினான்

துப்பாக்கியால் குறிவைத்தவாறு மூன்று நான்கு அடிகள் பின்நோக்கிச் சென்றான்.

மைத்திரி சுடுவதற்கு வசதியாக புவியரசனை நேராக தூக்கி நிமிர்த்திப் பிடித்தார்கள் எதிரி வீரர்கள்.

மைத்திரி குண்டுப் பொதிகளை கழற்றி சரிபார்த்து தயார்நிலைப்படுத்தி துப்பாக்கியை இயக்கினான்.

உந்திப்பாய்ந்த சன்னங்கள் புவியரசனை தூக்கியிருந்த எதிரிவீரர்களின் முகமூடி கிழித்து நெற்றிகளில் இறங்க வீழ்ந்த துப்பாக்கியை கைப்பற்றி ஆள்பதியின் நெஞ்சில் வைத்து பொத்தானை அழுத்தினான் புவியரசன்.

நிலவறைக் கதவு உயர தளபதிகள் ஆரிப், ஹென்றி போலன் தலைமையிலான இலங்கை இராணுவத்தினர் உள்விரைந்து கொண்டிருந்தனர்.

..............................................................................................

வளித்திரைகளின் முன் ஆஸ்த்தான தளபதியின் முடிவை தடுக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த மக்கள் மனங்களில் கடைசி நேர திருப்பங்கள் ஆனந்தப்போரிடியாய் ஆர்த்தெழ ஆர்பரிப்பின் ஆரோகணத்தில் தேசம் மட்டுமல்ல தங்கள் அருமைத் தளபதிகளும் மீண்டுவிட்ட சந்தோச இறுமாப்பு

2073 நூற்றியிருபத்தைந்தாவது சுதந்திரதின நேரலை விரிப்பு கடல் மணல் வெளியில் அலைகடலாய் மக்கள் சமுத்திரம் அணிதிரள

வான்வெளியில் பல்லாயிரம் விமானப் பறவைகளின் பூமழைப்பொழிவில் தளபதிகள்,புவியரசன், மைத்திரிசேனா, ஆரீப், ஹென்றிபோலன் உட்பட சாதனைப் படையணியினர் கௌரவிக்கப்பட மக்கள்தேசியக் கொடிகளை அசைத்து வாழ்த்தினர்.

மணல் முற்றத்தில் நடுநாயகமாய் எங்கள் தேசியக்கொடி பட்டொளி வீசிப் பறக்க படையணிகளின் பாண்ட் வாத்திய நாதங்கள் ஒருங்கிசைந்து முழங்கின.


– யாவும் கற்பனை –

# வா, வா, மனிதனே! வரவேற்கும் செவ்வாய்

ஸ்ரீநிவாஸ்



செவ்வாய், பூமியை அடுத்திருக்கும் நான்காவது கிரகம், ரோமர்களால் போர்க் கடவுளாக வணங்கப் பெறும் கிரகம் இது. கிருஷ்ணனைப் போல், முருகனைப் போல் செவ்வாய்க்கு இரண்டு துணைகள். ஆம் போபோர்ஸ், தேமோஸ் என இரு நிலவுகள் செவ்வாயை வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. முன்னிரவு வேளை களில், தலை நிமிர்ந்த நடு வானத்தைப் பார்த்தால், மினுமினுக்காத ஒரு சிவப்புப் பொட்டு தெரியும். தனது மேனி முழுவதும் துருவான இரும்பு ஆக்ஸைடை செங் கல் சிவப்பு நிறத்தில் பூசியிருக்கும் செவ்வாய் கிரகம் தான் இவ்வாறு தோற்றமளிக்கிறது. பற்பல கோடி ஆண்டு களுக்கு முன்பு - அங்கும் மேகம் இருந்திருக்கிறது. மழை இருந்திருக்கிறது .மரம், செடி, கொடிகள் இருந்திருக்கின் றன. சமுத்திரங்கள் இருந்திருக்கின்றன. சுருங்கச் சொன் னால், நமது பூமி போலவே செவ்வாயிலும் வாழ்வதற்கு உகந்த சூழல் இருந்திருக்கவேண்டும் என்பதுதான், நவீன விண்ணியல் ஆய்வுகளின் கணிப்பு. செவ்வாய் கிரகத்தில் இருந்து பிய்த்தெறியப்படும் கற்கள், பூமியின் துருவப் பிரதேசங்களை வந்தடைவது, மாதா மாதம் நிகழும் ஒரு சம்பவம். 1996-ல் நமக்குக் கிடைத்த செவ் வாய் கல்லின் மீது மேற்கொண்ட நுண்ணோக்கி ஆய்வு, அது பாறையல்ல, FOSSIL அதாவது, பலகோடி ஆண்டு களுக்கு முன்னால் வாழ்ந்து இறந்த ஓர் உயிரினத்தின் எலும்பு என்று தெரிய வைத்தது. ஆனால், இன்றைய செவ்வாய் கிரகமோ, நீரின்றி, காற்றின்றி, உயிர்கள் வாழ் வதற்கு எவ்வித சாத்தியக் கூறுகளும் அற்று, மடிந்து கிடக்கிறது. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு செவ்வாய் திடகாத்திரமாக இருந்தபோது, வீரியமான விண்கல் ஒன் றோ அல்லது வால் நட்சத்திரமோ அதன் மீது மோதி அதை பஸ்மாக்கிவிட்டது என்பது ஒரு பொதுக் கருத்து. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை செவ்வாயில்



தண்ணீர் ஆறு ஓடிக்கொண்டு தான் இருந்தது என்பதற் குச் சாட்சியாக 'ஆர்பிட்டர்' எனும் விண்கலம், செவ் வாயில் பல கால்வாய்களைப் படம் பிடித்துக் காட்டியது. அனைத்தும் இப்போது நீரற்ற கால்வாய்கள். மேலும், உறைநிலைக்கு மிகவும் கீழே இருக்கும் செவ்வாய் துருவப் பிரதேசத்தில், உருகாத நிலையில் பெரும் ஐஸ் மலைகளை 2003-ல் நாம் அறியப் பெற்றுள்ளதால், நீராதாரம் செவ்வாயில் நிச்சயம் உள்ளது என்பதும் வெளிச்சமாகியுள்ளது. அந்த ஐஸ் மலைகளை உருக்கி நீராக்கிவிட்டால் போதும். செவ்வாயை, இன்னொரு பூமியாக்குவதில் உள்ள பாதி வேலை முடிந்தாற் போலத் தான்! பூமி மட்டத்திலிருந்து 100 கி.மீ உயர வெளி முழுதும் பிராண வாயு உண்டு. எனவே, பூமியில் நாம் உயிர்வாழ பிரச்சனை இல்லை. ஆனால் இப்பொழுது உள்ள செவ்வாயில் வெளி ஒன்றே கிடையாது. அதாவது, செவ்வாயின் சமவெளி பகுதி தாண்டி, அதற்கென்று சொந்தமாக ஓர் அங்குல உயரம்கூடக் கிடையாது. பூமியில் ஓசோன் மண்டலம் வியாபித்துக் கிடக்கிறது. இதன் பயன்கள் இரண்டு! ஒன்று : அண்டசராசரத்தி லிருந்து எந்த ஆபத்தான கதிர்களும் உள்ளே நுழைந்து பூமியின் உயிரினங்களைப் பாதித்துவிடாமல் பாதுகாப் பது. இரண்டு : அதேபோல, பூமியிலிருந்து அதன் எந்த ஆதாரமும் வெளியே போகாமல் பாதுகாப்பது. இப்படி ஒரு போர்வை செவ்வாய்க்கு இல்லை. எந்த அபாய ஒளி மற்றும் ஒலிக்கதிர்களும் அங்கே நுழைந்துவிடலாம். மேலும், உயிர்வாழத் தேவையான எவ்வித ஆதாரத் தையும் வெளியேறாமல் பாதுகாத்தும் வைக்கமுடியாது.



செவ்வாயை பூமியாக்க வேண்டுமானால், ஏகப்பட்ட வாயுக்களைக் கொண்டு போய் செவ்வாய் கிரகம் முழுவதும் நிரப்பவேண்டும்! அப்படி செவ்வாய்க்கு என்று ஒரு செயற்கை வெளி தயார் செய்யப்பட்டு, அதற்கென்று ஓர் எல்லை வரையறுக்கப்படும் போதுதான், செவ்வாய் வெளிக்குள் வெப்பம் கூடும். அப்போதுதான் அதன் துருவப் பிரதேசங்களில் கட்டிக் கட்டியாக உறைந்து கிடக்கும் தண்ணீர் உருக ஆரம்பிக்கும். சமுத்திரங் களும், கடல்களும், வானமெங்கும் மேகங்களும் உருவாகி, அதன் நிலமெங்கும் நீர்ப்பசை நிரந்தரமாக் கப்படும். செவ்வாய் கிரகம் செழிக்கும். வெறும் துருப் பிடித்த சிவப்பு கோளமாக தென்பட்டு வந்த செவ்வாய் கிரகம், மெள்ளமெள்ள பசுமைக் கோடுகளைத் தன் மேனியெங்கும் கொள்ளத் துவங்கும், பிறகு? தாவரங்கள் தங்கள் ஒளிச்சேர்க்கையின்போது விடுவிக்கும் ஆக்ஸிஜன், செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் வாழத் தேவையான பிராணவாயுவை நிரந்தரமாக்கும். அந்த சாதனைக்கு சாட்சியாக நம் வருங்காலத் தலைமுறையினர் இருப்பார் கள். இதெல்லாம் நடந்தால்தான், செவ்வாயும் இன் னொரு பூமியாக உயிர்தெழும். இதெல்லாம் அத்தனை சுலபமா? நிச்சயம் கிடையாது! முழுக்க முழுக்க சவால் கள் நிறைந்த திட்டம் இது! இருந்தாலும் நிறைவேற்றி விடலாம். இன்னும் பல நூறு வருடங்கள் பல்லாயிரம் வருடங்கள் கழித்து, இந்த சிவப்பு கிரகம், பூத்துக் குலுங் கும் நந்தவனமாக, உயிர்கள் பற்பல வாழும் பெரிய வீடாக, பசுமைக் கிரகமாக மாறி இருக்கும். *

23 வருட கல்விச் சேவையில்....

உதயதாரகை கல்விக் கழகம்

கொற்றாவத்தை.

வடமராட்சியில்
அதிக வீதமான மாணவர்களை
சித்திபெறச் செய்யும்
ஒரே ஒரு கல்வி நிறுவனம்

தரம் - 01 தொடக்கம் தரம் 11
வரையான வகுப்புகளும்
உயர்தர கலை, வர்த்தக வகுப்புகளும்
நடைபெறுகின்றன.

- புலமைப்பரிசில் விசேட வகுப்புகள்
- வாராந்த அலகுப் பரீட்சைகள்
- விசேட ஆங்கில வகுப்புகள்
- மாதாந்த மீட்டல் பரீட்சைகள்

A/L 2016 Day Class
2018 கலை, வர்த்தக
புதிய பிரிவுகள்

ஆரம்பம்
02.01.2016 சனிக்கிழமை
காலை 9.00 மணி

# பின் சூனியத்துவம்



ஆதிகாப்பியன்

கவிதை பற்றிய பெருந்தேடல் எல்லை கடந்த பெருந்தீவாய் எந்த வரையறைக்குள்ளும் வசப்படாமல் முடிவிலித் தொடராய் பரந்து விரிகின்றன.

கவிதை என்றால் என்ன....? எப்படி வரையறுக்க....? எது வென்று இனம் காட்ட....? எது கவிதை....? எது கவிதை இல்லை....?

ஆண்டாண்டாய் ஆர்த்தெழுதும் கேள்விகளுக்கு விடை பகரும் வகையில் கீழ்வரும் கவி வரிகளை இனம் காட்டிக் கொள்ளலாம்.

கவிதை
மனவெளித் தரிசனம்,
புறவிழி ஓடதம்,
திசைவெளி கீற்று,
வாழ்வியல் சுகிப்பின் புத்தாக்கம்,
வடிவங்கள் கடந்து
வரிநிலைகளையும் தாண்டி
உள்ளூறைந்து கிளர்த்தும்
அருவத் தோன்றல்.

வித்தக பண்டிதங்களால் சொல் சமாதிகளில் உயிருக்கு மன்றாடிய தமிழ்க் கவிதைக்கு எளிய பதங்கள், எளிய நடை, எளிமைச் சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு என புது வனப்பும் வசீகரிப்பும் கொடுத்த மஹாகவி பாரதி "சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது, சோதி மிக்க நவகவிதை எந்நாளுமழியாத மஹா கவிதை" என்கிறார்.

எமது கவிப்பாரம்பரியம் கிறிஸ்துவிற்கு முன்பே உயர்நிலை பெற்றிருந்தன. சங்கத்து அகப்புற இலக்கியங்களின் உன்னத அமைப்பு, கற்பனை, சொல்நயம், உணர்ச்சி, ஓசை, படிமம், சுவை முதலான யாவும் நமது கவி உன்னதத்தின் வெளிப்படைகள். நமது கவிப்பெருக்கின் தோற்றுவாயாக தமிழ் கவிப்பாரம்பரியத்தின் அடிப்படையாக இவை துலங்குகின்றன.

"கனியிடை ஏறிய சுளையும்
முற்றல் கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்
காய்ச்சுப் பாகிடை ஏறிய சுவையும்
நனி பசு பொழியும் பாலும்
தென்னை நல்கிய குளிரின் நீரும்
இனியன என்பேன்
எனினும் தமிழை என்னுயிர்
என்பேன் கண்டீர்"

என வழங்கி

"தமிழுக்கு அமுதென்று பேர் அந்த தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என முழங்கும் பாவேந்தர் பாரதிதாசன் "எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லி சொல்லி தலைமுறை பல கடந்தோம்! குறை களைந்தோம் இல்லை!" என்றும் விசனப்படுகின்றார்.

கவிதை மற்றும் புனைவுகள் பற்றிய நமது கருத்து வெளிகள் மேலைப்புலச் சிந்தனைகளை கடன் வாங்கி வெறும் சொற்குறியங்களாக தமிழ் கவிப்பாரம்பரியத்தின் சுயம் தொலைத்து நமது வாழ்நிலைகளில் அந்நியமாகி சூனியவெளியில் எமது மண்ணின் நிதர்சனம் தேடுகின்றன. அகமாய் புறமாய் உற்பவித்த நமது கவிப் பாரம்பரியம் அவமாய் வேற்றுமொழிப் பாட்டில் தொலை யும் சூழமைவுகள்.


மேலைப்புல கவிதைகள் விமர்சனங்களின் படியெடுத்தலாக மயக்கும் சொற்களோடு கவிதையும் கவிதை பற்றியும் எழுதிவிட்டாலோ மாதிரிக் கவிதைகளின் தழுவல் களாய் ஒருமாதிரிக் கவிதைகள் படைத்துவிட்டாலோ அவைகளே கவிதைகள் என்றும் கவிதை விமர்சனங்கள் என்றும் கொண்டாடும் மனப்பாங்கு தமிழ் கவிப்புலத்தை இருண் மைக்குள் இறைத்து நமக்கான அடையாளங்களை தொலைத்துவிடும்.

கவிதை நெகிழ்வின் வெளி எப்படியும் என்னவாயும் இருக்கலாம். கவித்துவம் கொப்பளிக்கும் வீச்சு கவிதை வடிவிலும் சொற்களின் சேர்க்கையிலும் இருந்தாலும் கவிதை சொற்களே சொற்களின் கூட்டமோ அல்ல படைப்பாளியின் உணர்வெழு கீற்று. அது இவை எல்லா வற்றையும் தாண்டி அருவத் தோன்றலாய் வாசகனை தொற்றிக் கொள்ளும். தன்னையும் சக மனிதனையும் சூழ்ந்தெழும் நுண்ணுணர்வுகளின் பாய்ச்சல்களாய் கவிப்பொழிகைகள், வாழ்க்கைக் கோலங்களின் மாறு தடங்களால் வேறுபட்டு புதுமையும் பழமையும் இணைய, புதிய தரிசனமாய் நம் நிலம் நனைக்கும்.

புதுமையோ? புத்தாக்கமோ? கவிதையின் சொல்லோ? சொற்கூட்டங்களோ? அல்ல உத்திகளும் கிளர்த்தியெழும் நுண்ணுணர்வுத் தொற்றல்களுமே அவை. கவிதைகள் கிளர்த்தும் நுண்ணுணர்வு அறிவியலோடு சமரசமாக அவை பின் நவீனத்துவ கவிதைகளாக முகிழ்கின்றன. படிமக்குறிப்பீடுகளோ? யாப்புடைப்புக்களோ? பின் நவீனத்துவப் பாணிகளாக இனங்காட்டப்பட்டாலும் புனைவு அறிவியலுக்கு முரணாகாமல் அறிவியலோடு கைகோர்க்கின்றபோதே பின் நவீனத்துவம் அர்த்தமுறும் யாப்புடைப்பிலோ? படிமக் குறிப்பீடுகளிலோ வரிநிலைகளிலோ? பின் நவீனத்துவம் இல்லை கிளர்த்தும் பேருண்மையின் அர்த்தப்பாட்டின் இசைவில் தான் பின் நவீனத்துவம் துளிர்க்கின்றது. விளங்கா வரிநிலைகளில் புரியா குறிவழியில் உடையாப்பூட்டுக்களாய் தொலையும் சொற் கூட்டங்கள் பின் நவீனத்துவம் அல்ல பின் சூனியத்துவம்.

பின் நவீனத்துவம் பற்றிய தவறான புரிதல்களும் பார்வைகளும் பின் சூனியத்துவ இருண்மை போர்வைக்குள் நமது புனைவுகளை முடக்கி நமது இலக்கிய பாரம்பரியத்தின் தனித்துவங்களை காவு கொண்டுவிடும். மாற்றங்கள் வெளியால் மட்டுமல்ல உள்ளேயும் நிகழும். இதுதான் இயங்கியல் உண்மை. மேலைப் புல செல்வாக்குகளால் தான் மாற்றங்கள் நிகழ்கின்றன என்றில்லை. இயல்பான புத்தாக்க வேட்கைகளின் சிருஸ்டிப்பிலும் நமது இலக்கியத்தளம் கொலுவுற்றிருக்கும்.

மேலைப்புல கவிதைகளில் நீங்கள் காண்கின்ற - காணத பல சிறப்புக்களையும் நமது கவிதைகளில் கண்டுகொள்ளலாம். கவிதைப் பற்றி விமர்சகர் பலரும் சிலாகிக்கின்ற பலதும் நமது கவிதைப் பாரம்பரியத்திலும் அமிழ்ந்து கிடக்கின்றன.



புதிதாக சொல்கின்றோம், புத்தாக்குகின்றோம் என்றும் எமது புதையல்களை தொலைத்து பின் சூனியத்துவத்துள் மூழ்குதல் நம் தனித்துவங்களை மறுதலித்துவிடும்.

படைப்பாளிகளே! நமது நிலத்தினின்று கவிதை செய்யுங்கள். விமர்சகர்களே நமது புலங்களில் மேற்கோள் தேடுங்கள். யார் யாரோ தங்கள் தங்க்ள் மொழிகளில் ஆராய்ந்து கொடுத்த முன்வைப்புக்களை எங்களுக்கு மேற்கோள் ஆக்காதீர்கள்

தமிழ் புதுக் கவிதையின் தந்தை பாரதி பல மேலைப்புல கவிஞர்களை பின்பற்றி கவிதை புனைந்தபோதும் அவற்றை அப்படியே படியெடுக்கவில்லை.

"அக்கனிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்னும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்"

பாரதியின் அக்கினிக் குஞ்சிற்கு பலவாறு பொருள் கொள்ளபப்டுகின்ற போதும் தேவை கருதி நாம் கீழ்வரும் இரண்டு தன்மைகளில் பொருள் கொள்வோம்.

**பொருள் 1**

அக்கினிக் குஞ்சு என்பது வேற்று மொழி பகட்டு, நம் புனைவுகள் அல்லது விமர்சனங்கள் காடு, பொந்து என்பது நமது இலக்கிய பாரம்பரியம்.

வேற்று மொழிப்பாட்டிற்கு இடம்கொடுத்தால் அது தீயாய் நம் இலக்கிய தடங்களை தீய்ந்துவிடும்.

**பொருள் 2**

அக்கினிக் குஞ்சு என்பது நமது இலக்கியத் தடம் பற்றிய விழிப்பு வேற்று மொழிப்பகட்டு அல்லது இருண்மைப் புனைவுகள் காடு பொந்து நமது இலக்கிய பாரம்பரியம்

தமிழ் இலக்கியத் தடம் பற்றிய விழிப்பு நமக்கிருந்தால் வேற்று மொழிப் பகட்டும் இருண்மைத் திளைப்பும் தொலைந்து நமது இலக்கிய பாரம்பரியம் வெளிச்சம் பெறும்.

மேலைப் புல இலக்கியங்களின் பரீட்சயமும் ஆங்கிலப் புலமையும் நமக்கான நமது புனைவுகளை செழுமைப்படுத்துவனவாக இருக்கவேண்டுமேயொழிய இழிவுபடுத்துவனவாக இருத்தல் அஞ்ஞானமேயன்றி விஞ்ஞானம் அல்ல. பின்நவீனத்துவ செல்நெறியில் நமது இலக்கியப் பாரம்பரியம் புணர பின்சூனியத்துவம் தொலைய வேண்டும்.

(13 ஆம் பக்கம் பார்க்க)



# நெஞ்சில் நிறைந்த நெல்லியடி லக்ஷ்மி திரையரங்கு

யாழ் வதிரிவாசன்

**“என்னைக் குற்றவாளி என்கிறீர்களே!
நான் கடந்து வந்த பாதையை சற்றுப்
பின்னோக்கித் திரும்பிப் பாருங்கள்,
எத்தனை காட்டாறுகள் என்று
கணக்கு போட்டுப் பார்க்க முடியும்
பாட்டொலிக்கும் குயில்கள் இல்லை
படமெடுக்கும் பாம்புகள் நெளிந்தன
தென்றல் என்னைத் தீண்டவில்லை
தீப்பிளம்புகள்
என்னைத் திணற வைத்தன”**

பராசக்தி திரைப்படத்தில் நீதிமன்றக் காட்சியில் சிவாஜி முழங்கித் தள்ளும் வீரவசனங்கள். 50 வருடங்களுக்கு முன்பு கலைஞரின் உள்ளத்திலிருந்து அவரது 20 வயதில் ஊற்றெடுத்தஉணர்ச்சி மிகு வீரவரிகள் இவை.

**“தைரியமாகச் சொல் நீ மனிதன் தானா?
மனிதன் தானா
இல்லை நீ தான் ஒரு மிருகம்
இந்த மதுவில் விழும் நேரம்
மனமும் நல்ல குணமும்
உன் நினைவை விட்டு விலகும்”**

இது புரட்சித்தலைவர் எம்.ஜி. ஆரின் ஒளிவிளக்கு வரிகள் இன்று எத்தனையோ நவீன் ஊடகங்கள் மூலமாக நவீன மசாலா திரைப்படங்களை பார்த்து இரசித்தாலும் அந்தக்கால திரையரங்குகளில் நாங்கள் பார்த்து இரசித்த பழைய கருப்பு வெள்ளை திரைப்படங்களுக்கு இணையாகாது. அது ஒரு பொற்காலம். நான் லஷ்மி திரையரங்கில் முதன்முதலாக என் அம்மாவின் மடியில் இருந்து பார்த்த படம் ‘துலாபாரம்’. இது நடந்தது 1968ம் ஆண்டில் எனது மூன்றாவது வயதில் அன்று தொடங்கிய எனது பழைய திரைப்பட மோகம் பின்னைய வருடங்களில் ஏறுவரிசையிலேயே விருத்தியடைந்து சென்றது. அம்மா ஒரு பழைய திரைப்பட இரசிகையாக இருந்த காரணத்தினால் அவருடன் பல திரைப்படங்களை லஷ்மி திரையரங்கில் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. நாளடையில் நானும் ஒரு பழைய திரைப்பட பைத்தியமாகிவிட்டேன். எனது இந்த வெறிக்கு வடிகாலாய் அமைந்தது நெல்லியடி லஷ்மி திரையரங்கம்தான். நான் தனியே நடந்து சென்றும் பல பழைய திரைப்படங்களைப் பார்த்து சிவாஜியின் ‘அம்பிகாவதி’, ‘பாட்டும் பரதமும்’, ‘பாசமலர்’, ‘ஆலயமணி’, ‘இராஜஇராஜசோழன்’, ‘தில்லானா மோகனாம்பாள்’,‘வசந்தமாளிகை’,‘திருவிளையாடல்’ புரட்சி தலைவரின் ‘குடியிருந்த கோயில்’, ‘படகோட்டி’, ‘ஒளிவிளக்கு’, ‘அடிமைப்பெண்’, ‘ஆயிரத்தில் ஒருவன்’, ‘இராமன் தேடிய சீதை’, ‘மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்’ என இந்தப் பட்டியல் நூற்றுக்கணக்காக நீண்டு செல்லும். அப்பொழுது நான் தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். சிவாஜி, எம்.ஜி.ஆர். இரசிகர்களுக் கிடையே போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். எம்மோடு கல்வி கற்ற பொலிகண்டி, தேவரையாளி பிரதேச மாணவர்கள் தீவிர எம்.ஜி.ஆர் இரசிகர்கள். வதிரி, அல் வாயைச் சேர்ந்த நாங்கள் சிவாஜி இரசிகர்களாக இருந்தோம். இத னால் வகுப்பறையில் இடையிடையே மோதல்கள் வெடிக்கும். நான் சிவாஜி இரசிகனாக இருந்த போதிலும் புரட்சித் தலைவர் மீது மிகவும் பக்தியுள்ளவன். நான் வகுப்பில் என்றும் நடுநிலையாகவே இருந்து கொள்வேன். ஒரு முறை லஷ்மி தியேட்டரில் ‘ராஜபார்ட் ரங்கதுரை’ படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அருகில் இருந்த வயதுபோன மூதாட்டி ஒருவர் இவ்வாறு கூறியது என் செவிகளில் விழுந்தது. “நடிப்பு ஒரு பக்கம் இருக்கட்டும், சீமான்ரை நடைக்குத் தான்டா பொடியா காசு” சிவாஜி யின் நடையழகை எவ்வளவு தூரம் அந்த மூதாட்டி இரசித்திருக்கின்றார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். உண்மைதான். சிவாஜியின் தனித்துவ மான நடையழகு பல படங்களில் வெளிப்பட்டதுண்டு. ‘திருவிளையாடலில் மீனவன் வேடத்தில் நடக்கும் நடை, ராஜபாட் ரங்கத் துறையில் ஹம்லட் நாடகத்தில் நடக்கும் வீரநடை, உத்தம புத்திரனில் ‘யாரடி நீ மோகினி’ என்ற பாட்டின் போது நடக்கும் எழில் நடை என சொல்லிக் கொண்டே போகலாம். சிவாஜியின் நடை அழகுக்கு என்ன தனித்துவம் என்று நான் ஒரு முறை அல்வாய் தெற்கைச் சேர்ந்த பழங்கலைஞர் மங்களேஸ்வரனிடம் கேட்டபோது அவர் இவ்வாறு கூறினார். “சிவாஜி, மார்லன் பிராண்டோ என்ற ஓர் ஆங்கில நடிகரையே பின்பற்றி நடிக்கின்றார். நடிப்பும் நடையழகும் தனித்துவ் மாக இருப்பதற்கு அது தான் காரணம்”- என்றார். ஆனால் மார்லன் பிராண்டோ இவ்வாறு கூறுகிறார் “சிவாஜி என்னைப் பார்த்து நடிப்பதாகக் கூறுகின்றார். அது உண்மையா? பொய்யா? என்று எனக்குத் தெரியாது. ஆனால் சிவாஜியைப் போல என்னால் நடிக்க முடியாது என்பது மட்டும் உண்மை” அன்றைய காலங்களில் படம் பார்ப்பதற்குப் பெற்றோர் துணிந்து பணம் தந்துவிடுவார்கள். ஏனென்றால் படங்கள் தவறான படங்களாக இருக்காது என்பதில் அவ்வளவு நம்பிக்கை இருந்தது. விரச உணர்வுகள் கூட அந்தக் காலப்படங்களில் குறியீடுகள் மூலமாகவே (Symbolic) வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் இப்போது படுபச்சையாக வெளிக்காட்டப்படுவது காலத்தின் கேவலம். வடமராட்சி மக்களின் உணர்வுகள் கலை சார்ந்த வேட்கைகளுக்கு காலங்காலமாக விருந்தளித்த நெல்லியடி லஷ்மி தியேட்டர் இன்று இருந்த இடம்தெரியாமல் அந்த இடத்தில் நவீன வங்கிக் கட்டடமொன்று வானுயர்ந்து நிற்கின்றது. இன்றும் அந்தப் பாதையால் செல்லும்போது, அந்த இடத்தைப் பார்க்கும்போது அடிநெஞ்சில் ஒரு நெருடல் ஏற்படும். அந்த நெருடலின் வலி இன்றைய சந்ததிக்கும் புரியாது. அதை அவர்களுக்கும் புரிய வைக்கவும் முடியாது. லஷ்மி திரையரங்கானது வெறும் படத் தியேட்டர் அல்ல. அது வடமராட்சியின் கலை நிகழ்வுகளுக்கு மேடைகள் அமைத்துக் கொடுத்த ஒரு கலைக் கோயில். தென்னிலங்கை மற்றும் தென்னிந்திய கலைஞர்களுக்கும் களங்கள் பல அமைத்துக் கொடுத்த ஒரு வரலாற்றுக் கலாசார மேடை. சாதி பேதாபேதங்கள் கடந்து அனைவரும் ஒன்றித்த சமத்துவமன்று. நவீனமயமாக்கல் என்ற போர்வையில் நாம் இழக்கக்கூடாத பலவற்றை இழந்துவிட்டோம். இந்த வரிசையில் நெல்லியடி லஷ்மி தியேட்டரும் இணைந்துகொண்டது. நிலங்களை மட்டுமல்ல வரலாற்றுக் கலைக்கூடங்களை இழப்பதும் ஓர் இனத்தின் இருப்பை நாளடைவில் கேள்விக் குறியாக்கும். *



## நேர்காணல்

**காத்திர வரிகளின் சொந்தக்காரன்
புலோலியூர் வேல்நந்தனின்
நேர்காணல் அடுத்த இதழில்.
ஈழத்தின் கவனத்திற்குரிய
கவியாளுமையின் ஆழ்ந்த
கருத்துக்களை
எதிர்பார்த்திருங்கள்.**

(04 ஆம் பக்க தொடர்ச்சி)



பொன்விளையும் பூமியாக மாற்றினர். இந்த நாடுகள் எல்லாமே இப்போது விவசாயத்தில் தலைசிறந்து விளங்குவதற்கு இந்தியர்களின் உழைப்பே காரணம். இரண்டு தலைமுறைகள் தொடர்ந்து நிலத்திலேயே உழன்ற அவர்களுக்கு அதன் பிறகு தான் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஞானோதயமே வந்தது. கிறிஸ்தவப் பள்ளிகளில் சேர்ந்தார்கள். ஆங்கிலமும், பிரெஞ்சும் கற்றுக் கொண்ட அடுத்த தலைமுறை தமிழை மறந்தது. டிரினிடாட், ஜமைக்கா, சுரினாம், பிரிட்டிஷ், கயானா எனப் பல நாடுகளில் அவர்களுக்குக் குடியுரிமையும், சம அந்தஸ்தும் படிப்படியாக கிடைத்தது.

அவர்கள் மீது தான்! கணவன் மனைவிக்குள்பிரச்சனைவந்தால்மனைவிவேறொரு ஆண் துணையை பெற்றுக்கொள்ளும் நிலை. இதனால் இந்தியர்கள் மத்தியில் அடிதடி, கொலை என எல்லாமே சகஜமானது. இதைச் சமாளிக்க 'இனிமேல் கப்பலில் நூறு ஆண்கள் ஏற்றப்பட்டால், கண்டிப்பாக நாற்பது பெண்களாவது இருக்க வேண்டும்' என பிரிட்டிஷ் அரசு ஆணைபோட்டது. விபசார விடுதியிலிருந்த பெண்களை ஏஜென்டுகள் கூட்டிவந்து கப்பலில் ஏற்றிவிட்டார்கள்.

இது தவிர, கிராமங்களிலிருந்து இளம் விதவைகள், கோயில்களுக்கு நேர்ந்துவிடப்பட்ட பெண்கள் எனப் பலர் வலுக்கட்டாய மாக அனுப்பப்பட்டார்கள். பிரிட்டன், பிரான்ஸ், ஹாலாந்து என மூன்று நாடுகள் இப்படி இந்தியர்களை தங்கள் தீவுகளில் இறக்குமதி செய்தன. பிரிட்டன் இவர்களிடம் பிரித்தாளும் தந்திரத்தைக் கடைப்பிடித்தது. ஒரே ஊரிலிருந்து பத்து பேர் வேலைக்கு வந்தால், அவர்கள் தனித் தனி கப்பல்களில் பிரித்து அனுப்பப்படுவார்கள். அண்ணன் டிரினிடாட் தீவுக்குப் போனால், தம்பி கயானா வுக்கு போவார். பிரான்ஸ் அவர்களது அடையாளத்தையே அழிக்கும் வேலையைச் செய்தது. அவர்கள் அங்கு சென்று இறங்கியதுமே, அவர்களது மதத்தை மாற்றிவிட்டது. வெறும் 'பாவாடை' என்ற பெயரோடு போனவர் ஜோஸப் பாவாடே ஆனார். இப்படி ஜேம்ஸ் கருப்பின் (கருப்பன்) ஹென்றி விரப்பின் (வீரப்பன்) என அடை யாளங்கள் மாறின. அவர்களது சாமிகளைக் கும்பிட அனுமதி கிடையாது. மீறிக் கும்பிட்டவர்களுக்கு தண்டனை கிடைத்தது. அந்தச் சமயத்தில் ஜான் ஸ்கோபில் என்ற இடதுசாரித் தலைவர் பிரிட்டனில் இருந்தார். அவர் கூலிகளாக வரும் இந்தியர்கள் கொடுமைப் படுத்தப்படுவதை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். அதன் பிறகே கூலிகளை நடத்தும் முறையில் மாற்றங்கள் பிறந்தன. பத்து ஆண்டு காலம் முடிந்து இந்த 'கான்ட்ராக்ட் அடிமைகள்' பலர் திரும்பி இந்தியாவுக்கு வர முயன்ற போது அவர்களை இழக்க விரும்பாத பண்ணை நிர்வாகங்கள் ஒரு புது டெக்னிக்கைக் கண்டுபிடித்தன. பத்து ஆண்டு கெடு முடித்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஐந்து ஏக்கர் நிலம் இலவசம் தங்கள் சொந்த நிலத்தைப் பார்த்துக் கொண்டே அவர்கள் பண்ணைகளில் வேலை பார்க்கலாம்' என்று சலுகை அறிவித்தது. வளமான பண்ணைகளை ஒட்டியிருந்த சதுப்பு நிலங்கள் அவர்களுக்குத் தரப்பட்டன.

தங்கள் வியர்வையையும், ரத்தத்தையும் சிந்தி அவர்கள் அதைப்

ஆனால் பிரெஞ்சு தீவுகளான கொத்லூப், மார்டினிக் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் இவர்களைத் துரத்தி விட முடிவு செய்தார்கள். கடைசியில் அந்த மக்களுக்காகப் போராட ஒருவர் வந்தார். தமிழரான அந்த பாரிஸ்டர்தான் பிரான்ஸ் அரசோடு மோதி, குடியுரிமை வாங்கித் தந்தார். ஹென்றி சிதம்பரம் என்ற அந்த மகாத்மாவுக்கு 'கொத்லூப் காந்தி' என்று பெயரிட்டு சிலைகள் நிறுவி இன்றும் வணங்கு கிறார்கள். இன்று கரீபியன் தீவுகளில் இருக்கும் தமிழர்களில் பெரும்பாலானவர்களுக்கு தமிழ் பேசவோ எழுதவோ தெரியாது. இந்தியர்களுக்கும், கறுப்பர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் திருமண உறவில் இணைந்து பல இடங்களில் கலப்பினமாக மாறிவிட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குச் சொந்த நாடு பற்றிய பிரக்ஞையே போய்விட்டது. ஆனாலும் சில அடையாளங்கள் நிலைத்துவிட்டன. டிரினிடாட்டில் பிள்ளை குடும்பம், கயானாவில் நாகமுத்து குடும்பம் எனத் தொழில் ரீதியாக மேலே போயிருக்கும் பலர் தமிழர்கள். கம்ப்யூட்டர் யுகத்தின் ஹைடெக் மனிதர்களாக வாழ்பவர்களின் மனதுக்குள் கூட ஏதோ ஒரு மூலையில் தமிழின் ஒளிந்திருக்கிறான். எல்லாவற்றையும் தாங்கி இவர்கள் மேலே வந்து விட்டார்கள். ஆனால், இவர்கள் கப்பலில் ஏறும் போது விட்டுச் சென்ற பெண்டாட்டி, பிள்ளைகள் என ஆனார்கள்? கணவர்மார்களுக்காகக் கடைசிவரை காத்திருந்தார்களா? தினமும் கப்பலில் இருந்து வரும் கடுதாசியை எதிர்பார்த் திருந்தார்களா? அவர்களுக்கு யாராவது ஆதரவு தந்தார்களா? எத்தனை பேர் துறைமுகத்திலேயே காத்திருந்து பைத்தியம் ஆனார்கள்? யாரும் புரட்டிப் பார்க்காத அந்தப் கறுப்பு வரலாற்றுப் பக்கங்கள் இன்னமும் பல இருக்கின்றன. ●

நன்றி : - ஆனந்த விகடன்,
2005 தீபாவளி மலர்
இக்கட்டுரையை வாசிக்கும் போது பலாவின் பரதேசிப்பட ஞாபகங்கள் துளிர்த்தன. இக்கருத்தும்றுத்தான் பரதேசி உருவாக்கத்திற்கு அடிப்படையாக இருக்கவேண்டும் என்பது எமது எண்ணம்.


(11 ஆம் பக்க தொடர்ச்சி)

முதுசமாய்
நிகரில்லா பொக்கிஷமாய்
முதுரையாய் நல்வழியாய்
ஆன்றோர் கூடமாய்
ஆண்டாண்டாய் ஆர்முடுகும்
வளர்மொழியே!

கற்பக விருட்ச கொடிதனையாய்
ஆயிரம் ஆக்கிரமிப்புக்கள்
அடுக்கடுக்காய் விளைந்தாலும்
சிலகாலச் சிலுசிலுப்பில்
சருகாகி
சிதைந்தோடும் கொடிதளைகள்
கலங்காதே கண்மணியே
ஆராரோ ஆரிரரோ..... - ஆதி காப்பியன்

"உலகமயமாதல் பிண்ணனியில் தனித்துவங்களை அடையாளங்களை அழித்து விழுங்கி ஏப்பமிட முனை யும் பல்தேசிய நிறுவனங்களின் பரந்த சிலந்தி வலை அரசியலை மாயை அறியாமல் எம் மரபுகளை நாமே கேலி செய்து இழிவுக்குள்ளாக்கும் தந்திரங்களுக்கு எந்தவித சமூக பொறுப்புணர்வும் இன்றி எம்மவர்கள் எடுபட்டு போகின்றார்கள்"

- கவிஞர் .த. ஜெயசீலன்



கருத்துக்களும் மேற்கோள்களும் நமது புனைவுகள் பற்றிய ஆரோக்கியமான செல்நெறிக்கான எத்தனங்களே!

வரலாறுகளில் கவிஞர்களே சமூகங்களின் உன்னத போக்குகளின் உத்வேகங்களாய் மறுமலர்ச்சிகளின் அடிநாதங்களாய் ஆர்தெழும் மேல் நிலை எங்கள் போக்குகளால் தகர்தல் தப்பேயன்றி தவறு அல்ல. பின் சூனியத்துவ படைப்புக்களின் அன்னியம் சூழ்ந்தெழும் இருள் நிலை அப்பட்டமாய் புலப்படும் களநிலையில் வீண் இறுமாப்பில் விதண்டாவாதம் புரிதல் இலட்சிய தூர நோக்கல்ல ●




ஆராரோ ஆரிரரோ
அன்பெழிலே சீர்பெறுவாய்

சேராத சேர்கையினால்
சோராதே நம்முயிரே
பாரேழும் நீயோங்க
நாள்தோறும் உழைத்திடுவோம்
யாரென்ன செய்தாலும்
ஆரமுதே நீ அழியாய்


தேவாமிர்த சோலையிலே
அறிவோர் சாலையிலே
அமுதமொழிச் சாரலாய்
ஆன்றோர் தேடலாய்
இளையோர் நாடலாய்
ஆர்ப்பரித்து அணிவகுத்து
ஆரோகரித்து நீ மிளர்வாய்

அழகெழிலே நம் செந்தமிழே
தென்மதுர ஒளியாலே
திக்கெட்டும் தித்திக்கும்
செம்மொழியாய்
நம் தமிழே நீயிருப்பாய்

வேர்மொழியே! தாய்விழியே!
சாளரத் தென்றலே!
நல்வழித் தோன்றலே!
மூச்சுக்காற்றாய்
வாழ்வெளியோங்க
முதுசமாய்
நிகரில்லா பொக்கிசமாய்
ஆன்றோர் கூடமாய்
ஆண்டாண்டாய் ஆர்முடுகும்
வளர்மொழியே!

கற்பகவிருட்ச கொடிதளையாய்
ஆயிரம் ஆக்கிரமிப்புக்கள்
அடுக்கடுக்காய் விளைந்தாலும்
சிலகாலச் சிலுசிலுப்பில்
சருகாகி
சிதைத்தோடும் கொடிதளைகள்
கலங்காதே கண்மணியே
ஆராரோ ஆரிரரோ

(2 ஆம் பக்க தொடர்ச்சி)




மாளிகை' எனப்படும் 'புத்தரின் பல்' இருக்கும் புனிதக் கோயில். சமணமும் இப்படி ஆரம்பித்து, இதே மாதிரியான விளைவுகளைச் சந்தித்தது. கடவுள் என்ற உயர்ந்த ஜீவன் எதுவும் தனியாக இருப்பதாகச் சொல்லவில்லை மகாவீரர். ஆன்மா தான் முக்கியம் என்றார் அவர். அனைத்தையும் உணர்ந்து முக்தி பெறும் வழிதான் சமணம். ஆனால், அது இரண்டு பிரிவுகள் ஆனது. உருவ வழிபாடும் வந்தது. தீர்த்தங்கரர்கள் எனப்படும் வழிகாட்டிகளை வணங்குகிறார்கள். (மகாவீரர் 24-வது தீர்த்தங்கரர்) ஆனால், அவர்கள் வணங்குவது உருவத்தை இல்லை. உருவங்கள் வெறும் அடையாளம் தான்! அவர்கள் சொல்லிவிட்டுப் போன தத்துவங்களைத்தான் வணங்குகிறார்கள்.

இறைவன் திருநாமம் என எதையும் உச்சரிக்கவேண்டியதில்லை. கடவுளின் புகழைப் பாடவேண்டியது இல்லை. மௌனமே அங்கு பிரார்த்தனை! 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என வலியுறுத்தி வந்தது கிறிஸ்தவ மதம். அதற்கும் பழமையானது யூதமதம். (ஏசு கிறிஸ்து ஒரு யூதராகவே பிறந்தார்). யூதர்களின் தேவாலயங்களுக்கு 'சினகாக்' என்று பெயர். அவர்களது மதகுரு 'ரப்பி'. உருவ வழிபாடு அங்கு கிடையாது. அவர்களது புனித நூலான 'தோரா' வாழ்க்கை முறை, கல்வி, ஆட்சி முறை,



ஒழுக்கம் என எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிறது. உருவமற்ற இறைவனையும், அவர் தந்த புனித தத்துவங்களையும் வழிபடுகிறார்கள் யூதர்கள். ஹீப்ரு மொழியில் அவர்களது பிரார்த்தனை இருக்கும். தினமும் மூன்று வேளை வழிபாடு செய்ய வேண்டும். பழமையான யூத வழிபாட்டு முறையில் இறைவனைக் குறித்துப் பாடல்களை பாடுவது வழக்கம் இல்லை. ஆனால், கிறிஸ்துவத்தின் தாக்கத்துக்கு ஆளாகி, இப்போது சினகாக்கிலும் பாடல்கள் புகுந்துவிட்டன. யூதர்களின் புனித தினம் 'சப்பாத்' வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்தில் ஆரம்பித்து, சனிக்கிழமை சூரிய அஸ்தமனம் வரையுள்ள காலமே 'சப்பாத்' இந்த நேரத்தில் யூதர்கள் எந்த வேலையும் செய்ய மாட்டார்கள். கார் ஓட்டுவது, சமைப்பது என அத்தியவசியப் பணிகள் கூடக் கிடையாது. தேவாலயங்களுக்கு வரும் யூதர்கள் 'கிப்பா' எனப்படும் தொப்பி அணிந்து வழிபட வேண்டும். ஆண்களுக்குத் தனியிடம், பெண்களுக்குத் தனியிடம். யூதர்களின் புனித நகரம் ஜெருசலேம், பாரம்பாரியமாக இங்கு பிரமாண்ட தேவாலயங்களைக் கட்டி யூதர்கள் வழிபட்டு வந்தனர். அவர்களது முதற் கோயில் பாபிலோனிய படையெடுப்பாலும் அதன் பின் அதே இடத்தில் கட்டப்பட்ட இரண்டாவது கோயில் ரோமர்களாலும் அழிக்கப்பட்டது. இடிபாடுகளுக்கு மத்தியில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட பழைய கோயிலை ஒட்டி மேற்குச் சுவர் மட்டும் பத்திரமாக இருக்கிறது. ரோமர்கள் இரண்டாவது கோயிலை அழித்தபோது மிச்சம் விட்டுச் சென்ற ஒரே பகுதி அது. 'நான் உங்களோடு தான் இருக்கிறேன்' என்று கடவுள் யூதர்களுடன் பிணைப்பைக் காட்ட, இந்தச் சுவரை விட்டிருப்பதாக நினைக்கிறார்கள். இந்த பூமியிலேயே யூதர்கள் புனிதமாக நினைப்பது இந்தச் சுவரைத் தான். எனவே, உலகெங்கிலும் இருக்கும் யூதர்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையேனும் இந்தச் சுவரை தரிசிக்க விரும்புகிறார்கள். இந்த புனிதச் சுவரில் முட்டிக்கொண்டு தன்னிலை மறந்து அழுகிறார்கள். யூதராகப் பிறந்த ஏசு கிறிஸ்துவை இறைத் தூதராகக் கொண்டு உருவானது கிறிஸ்தவ மதம். இன்றைக்கு உலகில் அதிகம் பேர் பின்பற்றும் மதம் இது தான். இதில் ஏராளமான பிரிவுகள், ரோமன் கத்தோலிக், ப்ராட்டஸ்டன்ட், பாப்டிஸ்ட், மெதாடிஸ்ட், ஆர்த்தடாக்ஸ், காஸ்பெல், இவான்ஜெலிகல் என அமெரிக்காவில் மட்டுமே 200 பிரிவுகள் உண்டு. ஆரம்பத்தில் ரோமன் கத்தோலிக் மட்டும் தான். கிறிஸ்தவர்களின் புனித நாள் ஞாயிற்றுக்கிழமை. ஏசு உயிர்த்தெழுந்த நாள். தேவாலயங்களில் கூட்டமாக வழிபடுவதுதான் கிறிஸ்தவத்தின் அடையாளம். இறைவனைப் பாடல்களாலும் இசையாலும் புகழ் வேண்டும். ரோமன் கத்தோலிக்கர்களின் புனிதத் தந்தை போப்.ஏசுவின் பிரதான சீடரான புனித பீட்டரின் வழித்தோன்றலாக இவர் கருதப்படுகிறார். தங்கள் வாழ்நாளில் ஒரு தடவையாவது வாடிகன் சென்று போப்பிடம் ஆசி பெறவேண்டும் என்பது தான் கத்தோலிக்கர்களின் லட்சியக் கனவு! உலகெங்கும் பரவியிருக்கும் இன்னொரு மதம் இஸ்லாம். 'இஸ்லாம்' என்ற அரபு வார்த்தைக்கு அடிபணிதல் என்று அர்த்தம். கடவுளின் முன்னால் அடிபணிந்து அமைதி தேடுதல்! இஸ்லாமியர்களுக்கு ஒரே இறைவன். அவர் பெயர் அல்லாஹ். நபிகள் நாயகம் அவரது தூதர். அவர்களது புனித நூலான 'திருக்குர்ஆன்' கடவுளின் வார்த்தைகள். இதற்கு 'ஓதப்பட்டது' என்று அர்த்தம். இறைவன் நபிகள் நாயகத்திடம் ஓதியவை தான் அதில் இருக்கின்றன. இஸ்லாமியர்களுக்கு ஐந்து வழிபாட்டுக் கடமைகள் உண்டு.



முதலாவது, கலிமா. 'வணக்கத்துக்குரியவர் இறைவன் அல்லாஹ் ஒருவரே' என்று ஈமான் (நம்பிக்கை) கொள்வது. இரண்டாவது, ஐந்து வேளை தொழுகை. பத்து வயதுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கட்டாயம் தொழுகை செய்ய வேண்டும். தொழுகை செய்யாதவர்கள் முஸ்லிமாகக் கருதப்பட மாட்டார்கள். தொழுகைக்கான நேரங்கள் வரையறுக்கப்பட்டவை. மூன்றாவது, ஜகாத். ஒவ்வொரு முஸ்லிமும் தங்களது ஆண்டுச் சேமிப்பிலிருந்து 2.5 சதவிகிதம் ஏழைகளுக்குத் தரவேண்டும். ஆக, தானமும் இரு வழிபாடு நான்காவது, ரம்ஜான் மாதத்தில் நோன்பு இருத்தல். ஐந்தாவது, வழிபாட்டுக் கடமை. ஹஜ் யாத்திரை. உடல் ஆரோக்கியத்தோடு இருக்கிற ஒவ்வொரு முஸ்லிமும் தங்கள் வாழ்நாளில் ஒரு தடவையாவது மெக்காவுக்கு ஹஜ் யாத்திரை மேற்கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு மெக்கா, மதீனா ஆகியவை புனிதத் தலங்கள், இவற்றுக்கு அடுத்து ஜெருசலேமில் இருக்கும் அல அக்ஸா மசூதியும் புனிதமானது. இறைத் தூதராக வந்த நபிகள் நாயகத்தை இறைவன் இறக்கைகள் கொண்ட ஒரு குதிரையை அனுப்பி வானுலகம் அழைத்துக் கொண்டது இங்கிருந்து தான்! எனவே, இங்கு வரவும் முஸ்லிம்கள் விரும்புகிறார்கள். ஜப்பானின் பழைமையான மதம் ஷிண்டோ, 'கடவுள்களின் வழிகள்' என்று அர்த்தம். கடவுள்களை அவர்கள் 'காமி' என்கிறார்கள். பலவிதமான காமிகள் ஜப்பானில் வழிபாட்டில் உண்டு. நம்ம ஊர் சாமிகள் பலவற்றின் அடையாளம் இந்தக் காமிகளுக்கும் உண்டு. நெருப்புக்கு, காற்றுக்கு, கடலுக்கு இப்படி எல்லாவற்றுக்கும் தனித்தனிக் கடவுள். ஏகப்பட்ட கோயில்கள், பரீட்சையில் பாஸானால், கல்யாணமானால், குழந்தை பிறந்தால் எல்லாவற்றுக்கும் கோயிலுக்குப் போகிறார்கள். விரதங்கள், தாயத்துகள் எல்லாம் உண்டு. வீட்டுக்குள் ஒரு அறையை அல்லது ஷெல்:.பை பூஜையறையாக மாற்றி வைத்து வழிபடுகிறார்கள். இதற்கு 'காமிதானா' என்று பெயர். கடவுள் உருவங்களோடு, முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றும் இங்கு இருக்கும். மதங்களிலேயே இளமையான மதம் சீக்கிய மதம். இது தோன்றி ஐந்நூறு ஆண்டுகள் தான் ஆகின்றன. பிரிவுகள் எதுவும் இல்லாமல் கட்டுக்கோப்பாக இருக்கிற மதம் இது. பஞ்சாபி மொழியில் 'சீக்' என்றால் சீடர் என்று அர்த்தம். சீக்கியர்கள் எல்லோரும் சீடர்கள் பத்து குருமார்களின் படிப்பினைகளைப் பின்பற்றும் சீடர்கள். அந்தப் படிப்பினைகள் தொகுக்கப்பட்டு 'குரு கிரந்த சாகிப்' என்ற புனித நூலாகி இருக்கிறது. சீக்கியர்களுக்கு ஒரே கடவுள். அவர் எல்லா மதத்துக்கும் உரியவர். உருவமற்றவர். சீக்கியர்கள் வழிபடுவது குருத்வாராவில் இங்கு சிலைகள் இருக்காது. மதகுருக்கள் யாரும் இருந்து பூஜை செய்ய மாட்டார்கள். அங்கு புனித நூலான கிரந்தம் மட்டும் இருக்கும். அதுவே அவர்களின் குரு: வழிகாட்டி! அதை நன்கு கற்றுத் தேர்ந்த கிரந்தி ஒருவர் அதிலிருக்கும் தத்துவங்களைப் படித்துச் சொல்வார். ஆனால், அவருக்கு ஸ்பெஷல் அந்தஸ்து எதுவும் கிடையாது. சீக்கியர்களுக்குச் சடங்குகளில் நம்பிக்கை கிடையாது. சீக்கியர்களின் புனிதத்தலம் அமிர்தசரஸில் இருக்கும் பொற்கோயில், ஆனால், எல்லோரும் கட்டாயம் அங்கு போய்த்தான் ஆகவேண்டும். என்ற அவசியம் கிடையாது. குரு கிரந்த சாகிப் எங்கெல்லாம் இருக்கிறதோ, அதெல்லாமே அவர்களது புனிதத்தலம். வீட்டிலிருந்தபடியே கூட அதைப் படிக்கலாம். இன்னும் எத்தனையோ பெயர்களில் இறைவனை வழிபடும் எத்தனையோ மதங்கள் உண்டு. ஆனால் எல்லாவற்றின்



குறிக்கோளும் ஒன்றுதான். மனித இனத்தை மேம்படுத்துவது. வழிபாடுகளில் இறைவனின் அடையாளம் முக்கியமில்லை. நம்பிக்கைதான் முக்கியம். பொங்கிப் பிரவாகமெடுத்து ஓடும் கங்கை நதி, அதில் பக்தியோடு வந்து நீராடும் எல்லோரது பாவத்தையும் ஏற்றுக் கொள்வதாக ஐதீகம். இதற்காக உலகின் எந்தெந்த மூலைகளிலிருந்தோ வந்து கங்கையில் நீராடுபவர்கள் உண்டு. அதே சமயத்தில் கங்கைக்கரையிலேயே வாழ்ந்து கொண்டு அந்தப் புண்ணிய நதியைப் புறக்கணித்துவிட்டு வீட்டுக் கிணற்றில் குளிப்பவர்களும் உண்டு. அவரவர் நம்பிக்கைகளுக்கு ஏற்ற பலன் கிடைத்துக் கொண்டு தான் இருக்கிறது.

*நிதர்ஸனா*


உயிர் மெய் உண்மைகளின் சிகரம் தொடட்டும் — வாழ்த்துவோர் :

விமலா இரும்பகம்
A9 வீதி, சாவகச்சேரி
விமலா ரான்ஸ்போட்
பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி
உரிமையாளர் : கி.தவேந்திரராசா(தவம்)

சுதா சூ பலஸ்
A9 வீதி,
சாவகச்சேரி

சானு & சந்தோஸ்
ரான்ஸ்போட்
பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி


S.J மரக்காலை
பெருங்குளம் சந்தி
சாவகச்சேரி
உரிமையாளர் :- சி.சிவதீசன் (சுமன்)




















# வரிசை 5








**வரிசை 5 இல் வரிசைக்கான இடங்களை கொடுக்கப்போது நீங்கள் தான்?**

உங்களுக்கு விருப்பமான தொடர் நாடக ஜோடிகள் நடிகர்கள் இலக்கங்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள். உங்கள் விருப்பத் தெரிவை வரிசைப்படுத்தி S.M.S செய்யுங்கள் . தொலைக்காட்சி ஜோடிகளின் விருப்ப ஒழுங்கு எனின் T எனவும் நடிகர்களின் விருப்பு ஒழுங்கு எனின் A எனவும் ரைப் செய்து உங்கள் விருப்ப ஒழுங்கில் இலக்கங்களை வரிசைப்படுத்துங்கள்.

என்ன நீங்களுமா இப்படி!?

முணுமுணுப்பதும் பொச்சடிப்பதும் எங்களுக்கு கேட்க்கின்றது. கவலைப்படதீர்கள் வாசகர்களே இவைகள் எல்லாம் சும்மா மாதிரிதான். அடுத்த வாரம் நமதுகளும் வரிசைப்படுத்தல்களில் கலந்து உங்கள் விருப்பத் தேர்வில் திளைக்கும்.

S.M.S இலக்கம் :- 021 568 5381




வாசகர்களே!

உயிர்மெய்யை படித்து சுவைத்திருப்பீர்கள். உங்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக இவ்வாறான பக்கங்களையும் இணைக்க முயன்றுள்ளோம்.தொடர்ந்து வரும் இதழ்கள் இன்னும் அதிக பக்கங்களையும் பல்சுவை விடயத்துவங்களையும் உள்ளடக்கி உங்களை குஷிப்படுத்தும். உயிர்மெய் தொடர்பான உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை வரவேற்கின்றோம்.

# சுன்னாகம் நிலத்தடி நீர் தீராத இனப் பிரச்சினையா?

அலசல் அறிக்கை

உந்தல் - 01



அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு மாற்று வழிகளையும் பிரச்சினைக்கான வடிகால்களையும் விரைவுபடுத்த வேண்டிய தருணம் கட்சி பேதங்கள் கடந்து அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் ஒன்றித்து ஆக்கம் செய்ய வேண்டிய நேரம் கால வீணடிப்புக்கள் ஏன்?

நிலத்தடி நீரில் எண்ணெய் (Oil) கலந்துள்ளதா? இல்லையா? என்பதை விட அந்த நீரைக் குடிக்கலாமா? இல்லையா? என்பதுதான் பிரச்சினை. இது தொடர்பாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு அறிக்கைகள். நீரில் எண்ணெய் கலந்துள்ளது குடிப்பது ஆபத்தானது என்கிறது ஒன்று, நீரில் எண்ணெய் இல்லை என்கிறது இரண்டாவது. நீரில் எண்ணெய் கலந்திருக்கவில்லை எனப்பட்டபோதும் அந்த நீர் குடிப்பதற்கு உகந்ததா? இல்லையா? என தெளிவுபடுத்தப்படவில்லை. போட்டிக் கருதுகோள்களில் தீர்ப்புப் பரிசோதனை செய்து சரி கண்டுபிடிக்கப் போகும் கலிலியோக்கள் யார்?

யாழ்ப்பாணத்து நிலத்தடி நீர் குடிப்பதற்கு உகந்தது அல்ல. மாற்று நீர்த் தேவை ஒன்றின் தேவை எழுபதுகளிலிருந்தே உணரப்பட்டுள்ளதாக அறியவரும் இந்த வேளையிலே அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் என்னதான் கிழித்தார்கள் என எண்ணத் தோன்றுகிறது.

மலக் கழிவுகளும் கிருமிநாசினிகளும் எண்ணெயும் கலந்த குடிப்பதற்கு ஒவ்வாத நீரைக் குடிப்பதற்காகவா தமிழ் மண் இவ்வளவு புத்திஜீவிகளைப் பிரசவித்துள்ளது.

யாரும் யாரையும் குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை, வழமைபோல இது இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட இன அழிப்பு என அரசாங்கத்தின் மீது பழிபோட்டு அறிவிலித்தனமாய் இருப்பதும் வேலைக்காகாது. இந்த நேரத்தில் கடல் நீரை நன்னீராக் கலாமா? இரணைமடுத் தண்ணீரை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரலாமா என விவாதம் செய்வதிலும்தான் எங்கள் நேரங்களும் ஒதுக்கீடுகளும் செலவாகிக்கொண்டிருக்கின்றன. மறுபுறத்தில் எங்களுக்குத் தெரியாமலேயே நாங்கள் பருகும் நீர் எங்களை மெல்லமெல்ல சாகடித்து புற்றுநோய் முதலான நோய்களின் பரம்பலுக்கும் சுகாதாரக் கேடுகளுக்கும் வித்திட்டுக் கொண்டிருக்கிறது. நாங்கள் முதலில் தீர்த்துக்கொள்ளவேண்டிய பிரச்சினைகள் இங்கே இருக்க வெட்டி நியாயங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம்.

2015 மாகாணசபை ஒதுக்கீடுகளின் தேக்கம் மாகாண சபை செயற்பாடுகளை ஆண்டிறுதியில் அருணாச்சலம் ஆக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். நமது திணைக்களங்கள் பலவற்றிலும் இவ்வாறான அருணாச்சல செயற்பாடுகள்தான் நிகழ்ந்து வருவதாகக் கேள்வி. சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பாக எத்தனையோ போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்துவிட்டன. இருந்தாலும் தீர்க்கமுடியாத இனப் பிரச்சினையாக இப் பிரச்சினையும் நீள்வது வருத்தம் தருகின்றது. சுன்னாகம் நிலத்தடி நீரை வடிகட்டிப் பருகலாம் என்பது பலரின் கருத்து. நவீன தொழில்நுட்பம் நீரை வடிகட்டுவதற்கான இலகு பொறிகளை குறைந்த செலவில் நமக்குத் தந்துள்ளது. அவ்வாறான வடிகட்டிகளில் ஒன்றை யாழ்ப்பாணத்தவர் ஒருவர் உருவாக்கியுள்ளதாகவும் அறியவருகின்றது. இவ்வாறான வடிகட்டிகளை மக்களுக்கு வழங்குவதன் ஊடாகவோ கிராமங்கள் தோறும் பாரிய வடிகட்டித் திட்டங்களை விரிவுபடுத்துவதன் ஊடாகவோ யாழ்ப்பாண நிலத்தடி நீர்ப் பிரச்சினைக்கு தற்காலிக உடனடித் தீர்வைக் காணமுடியும்.

2004 சுனாமியின் பின்னர் மக்கள் கடல் உணவுகளை உண்பதைத் தவிர்த்து வந்தனர். ஆராய்ச்சி முடிவுகள் கடலுணவுகள் ஆபத்தானவை அல்ல உண்பதற்கு ஏற்றவையாகவே உள்ளன என உறுதிப்படுத்தியபோதும் பெரும்பாலான மக்கள் கடலுணவுகளிலிருந்து விலகியே இருந்தனர். கடலுணவுகளுக்கான கேள்விகள் குறைவடைந்து கடற்தொழிலே அஸ்தமித்துவிடுமோ என்ற சூழமைவில் அப்போதைய அரச பிரதானிகள் சமைத்த கடலுணவுகள் உண்பதை பெரிய விழாவாக்கி மக்களோடு மக்களாக கடலுணவுகளை உண்டு கடலுணவுப் பயத்தைப் போக்கினர். ஏன் நமது தலைமைகளும் இவ்வாறான விழா ஒன்றை ஏற்பாடு செய்யக்கூடாது.

தலைமைகளே!

மக்களோடு மக்களாக நீங்களும்தான் வடிகட்டிய சுன்னாக நிலத்தடி நீரைப் பருகி நிலத்தடி நீர் தொடர்பான மக்களின் பயங்களைப் போக்குங்களேன்.

- எழுத்துப் பிரபஞ்சன்


சாத்தியம் சொல்லல்ல செயல்

உயிர்மெய்

வாராந்த இயங்கியல் பேரிதழ்

'உயிர்மெய்'
உங்கள் கரங்களில் தவழ்கிறது
மகிழ்ச்சி உங்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் தான்
இரண்டாயிரத்து பதின்நான்கிலேயே
உயிர்மெய் வெளியீட்டிற்கான
எத்தனங்கள் தொடங்கிவிட்டபோதும்
நீண்ட பிரயத்தனங்களில்
இப்போதுதான் சாத்தியமாகியுள்ளது.

"சாத்தியம் சொல்லல்ல செயல்"
என்ற மகுடத்தோடு வெளிவரும் உயிர்மெய்
எதுமாதிரியுமல்லாத புதுமாதிரியாக
எந்தப் பக்க சார்புமின்றி
நடைமுறைப் பிரச்சினைகளின் அலசல்களாக
ஊடகப் பார்வைகளின் மீட்டல்களாக
சாத்திய வழிகளில் நம் தலைமுறைகளின்
நீட்சிக்கும் மீட்சிக்கும் களம் கொடுக்கும்.
வாழ்க தமிழ் வளர்க நம் தேசம்
உயிர்மெய் உணர்வெளித் தரிசனம்
அறிவொளிச் சேர்ப்பியம்
பலர்மொழிகளின் சங்கம சாகரம்



புலோலி பருத்தித்துறையிலுள்ள உயிர்மெய் வெளியீட்டகத்தினரால் யாழ்ப்பாணம் பத்மாஸ் அச்சகத்தில் 01.01.2016 அன்று அச்சிட்டு வெளியிடப்படுகின்றது